மு. இராசதுரை தலைமை ஆசிரியர்

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

Sri Lanka

மலர்: 13 இதழ்: 10 | செப்ரெம்பர், 1961 | விலை: சதம் 15



# அட்டைப் படம்




நமது பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் செப்ரெம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 6 ந் திகதிவரை பெல்கிரேட் நகரில் நடைபெற்ற நடு நிலைமை நாடுகளின் மகாநாட்டிற்குச் சமுகமளித்தார். பிரதம மந்திரி என்ற உரிமையோடு மாத்திரமன்றி, பிள்ளைகளின் துயரத்தை அறியத்தக்க தாய் என்ற சிறப்பான உரிமையோடும் இம்மகாநாட்டில் பங்குபற்றியிருப்பதாகப் பிரதமர் தனது சொற்பொழிவில் கூறினர். அணுக்குண்டு யுத்தத்தை வன்மையாகக் கண்டித்துப் பேசிய நம் பிரதமர் சகல பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்டார். தமது சொந்த நலன்களையும், இலட்சியங்களையும் காப்பாற்ற விரும்பும் பலம்படைத்த தேசங்கள் மக்களின் உயிருக்குச் சேதம் விளைவிக்கத்தக்க யுத்தக் கெடுபிடிகளில் ஈடுபடுவது நல்லதல்ல என்று நம் பிரதமர் சுட்டிக் காட்டினர். இப்பேச்சின் மூலம் இலங்கைக்குப் பெருமை தேடித்தந்த நம் பிரதமர் பெல்கிரேட் மகாநாட்டில் சொற்பொழிவாற்றிய சாயலை நமது இம்மாத இதழின் அட்டைப்படம் அலங்கரிக்கின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெல்கிரேட் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் .. .. | 3 |
| 2. | சிற்பாசாரி திரு. செ. இராமகிருஷ்ணன் அவர்கள் .. .. | 12 |
| 3 | ஹிந்து தேவாலயங்கள் .. .. .. | 16 |
| 4. | யாழ்ப்பாணத்துப் பொற்கொல்லர் .. .. .. | 20 |
| 5. | மட்டக்களப்புச் சரித்திர இயல் .. .. .. | 22 |
| 6. | மாந்தருள் சிறந்த மதியாபரணம் .. .. .. | 24 |
| 7. | மதியாபரணம் அவர்களின் தொண்டும் மறைவும் .. .. | 30 |


ஜே. என். ஆர் 19589—5,608 (9/61)



பெல்கிரேட் மகாநாட்டில் இலங்கைப் பிரதம மந்திரி சொற்பொழிவாற்றுகிறார்.

# பெல்கிரேட் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர்

உலகப் பிரச்னைகளிலுள்ள நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை விவாதிக்கும் பொருட்டு ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 நாடுகள் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ந் திகதியன்று பெல்கிரேட் நகரில் ஓர் உச்சி மகாநாட்டை நடாத்தின. இதில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார். ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதியன்று பிரதமர் ஸ்ரீமாவோ தனது தூதுக் கோஷ்டியுடன் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். நிதி மந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ், வெளிநாட்டுத் தொடர்புப் பிரிவின் உதவிக் காரியதரிசி திரு. வை. துரைசுவாமி ஆதியோரும் பிரதமருடன் கூடச் சென்றார்கள்.

செப்ரெம்பர் மாதம் 1 ந் திகதி ஆரம்பமான இம் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதமர் சமூகமளித்ததும், சகல நாட்டுப் பிரதமர்களும் மகிழ்ச்சி மிகுதியால் கைதட்டி ஆரவாரித்து அவரை வரவேற்றனர். நம் பிரதமர் இம்மகாநாட்டில் வெகு சாமர்த்தியமாகப் பேசியதை உலக நாடுகள் முழுவதும் பாராட்டின. தான் ஒரு பெண் என்ற முறையிலும், ஒரு தாய் என்ற முறையிலும் மகாநாட்டுக்கு வந்திருப்பதாக பிரதமர் பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபின் அணு ஆயுத உபயோகத்தை வன்மையாகக் கண்டித்தார். அவர் நிகழ்த்திய பேச்சு வருமாறு :-

தலைவர் அவர்களே ! நண்பர்களே ! உலக சமாதானத்திற்காக உழைப்பதில் சரித்திர முக்கியத்துவம் பெறக்கூடிய இம்மகாநாட்டில், எனது நாட்டைப் பிரதிநிதிதுவம் செய்யக்கிடைத்தமை ஒரு பெரும் கௌரவம் எனக் கருதுகிறேன். எனது

நாட்டின் பிரதிநிதியாக மட்டுமன்றி, மனித இனத்தைப் பேணுவதில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள கோடிக் கணக்கான உலகத் தாய்மார்களின் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு பெண் என்ற முறையிலும், ஒரு தாய் என்ற முறையிலும் இம்மகா சபையில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இம்மகாநாடு இவ்வழகிய பெல்கிரேட் நகரில் கூட்டப்பட்டதையிட்டும் சந்தோஷமடைகிறேன். இதற்கு, நாம் கண்கூடாகக்காணக் கூடிய யூகோஸ்லாவிய மக்களின் உபசார-பான்மையும் காரணம். அத்துடன், ஐரோப்பிய நகரம் ஒன்றில் இம்மகாநாட்டைக் கூட்டியதன் மூலம் எங்கள் லட்சியங்களும், நம்பிக்கைகளும் ஒரு கண்டத்தையோ பிராந்தியத்தையோ சார்ந்ததல்ல என்பதும், சர்வதேச சமாதானம், பாதுகாப்பின் அவசியத்தை அவர்கள் எங்கிருந்தாலும் உணர்ந்துள்ளார்கள் என்பதும் அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மக்கள் இரண்டு உலக யுத்தங்களின் பயங்கரங்களில் இருந்தும் விலகியிருந்தனர். கத்தியின்றி இரத்தமின்றி அடிமைத்தளையை அறுத்தெறிந்தோம். இவற்றின் காரணமாக இலங்கையில் உள்ள நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் எனவே கருதுகிறோம். எனினும், எங்கள் நாடு சுதந்திரமடைந்து எட்டு வருஷங்களுக்குப் பின்னர், காலஞ்சென்ற எனது கணவர் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டபோதே நாட்டில் இருந்த அந்நிய தளங்கள் அகற்றப்பட்டு எந்த வல்லரசுக்கூட்டுடனும் சேராத நடுநிலைமைக் கொள்கை வெளிநாட்டு விவகாரங்களில் திடமாகக் கடைப் பிடிக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் மற்றைய நாடுகள் பலவற்றின் அனுபவம் அவ்வளவு அதிர்ஷ்டவசமானதாக இருக்கவில்லை. யூகோஸ்லாவியா போன்ற சில நாடுகள் யுத்தகளமாக்கப்பட்டன; கியூபா, அல்ஜீரியா போன்ற நாடுகள் சுதந்திரம் அடைவதற்கு அவற்றின் புதல்வர்கள், புதல்விகள் பலரைப் பலியிடவேண்டியிருந்தன; ரியூனீஷியா போன்ற நாடுகள் தமது நாட்டினுள் இருக்கும் தளங்கள்மீது அரசுரிமை செலுத்த இன்னும் முனைந்து கொண்டிருக்கின்றன.

ஆயினும், தனிப்பட்ட நாடுகளின் குறிப்பிட்ட பிரச்னைகளைப் பரிசீலனை செய்வதற்காக இம்மகாநாடு பெல்கிரேட்டில் கூடவில்லை. எங்கள் நாடு ஒவ்வொன்றும் வல்லரசுக் கோஷ்டி எதனுடனும் சேராது, நடுநிலைமைக் கொள்கையை அனுசரித்து, சமாதானத்துக்கும், சமாதானமாக உடனிருந்து வாழ்வதற்கும் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதனால் வல்லரசுக் கோஷ்டிகளிடையே பிளவுபட்டு அணுயுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் உலகில் செய்யப்படும் பொது முடிவுகளிலும், பிரகடனங்களிலும் எங்கள் குரலையும் எழுப்புதற்கு உரிமை இருக்கிறது என்ற நம்பிக்கையுடனேயே இங்கு கூடியுள்ளோம்.

இம்மகாநாட்டில் முன்பு பேசிய பலநாட்டுத் தலைவர்கள் மூன்றாவது கோஷ்டியையோ அல்லது வல்லரசையோ ஸ்தாபித்தல் நடுநிலைமை நாடுகளின் நோக்கமல்ல என அழுத்தந் திருத்தமாகக் கூறினர். இக்கருத்துக்கு எங்களில் எவரும் உடன்படாது இருக்கமுடியாது. ஏனெனில் நடுநிலைமை என்ற கொள்கைக்கே அது முரண்பாடானது. மூன்றாவது வல்லரசாவதைத் தவிர்க்கவேண்டும் என்ற ஏக்கத்தில் எமது நாடுகளிடையே நிலவும் ஒற்றுமை மனப்பான்மை—இம் மகாநாட்டிலேயே தெளிவாகக் காணக்கூடிய அந்த ஒற்றுமை உணர்ச்சியை நாம் சிதறவிடக் கூடாது. உலக விவகாரங்களைப் பொறுத்தவரையில் நடுநிலைமைப் பான்மையில் சிந்திக்கும் தன்மையைக் கூடியவரையில் குறைக்க முயலவேண்டும். கடந்த காலங்களில் போல நாம் இனிமேலும் தற்செயல் ரீதியில் கலந்துரையாடக் கூடாது என்பது எனது அபிப்பிராயம். உலக வரலாற்றிலேயே மிக நெருக்கடியான தருணத்தில், சவால் நிறைந்த சூழ்நிலையில் நாம் கூடுகிறோம். இச்சவாலை எதிர் நோக்கக்கூடிய முறைகளை நாம் கையாள வேண்டும். ஆதலால், எங்களிடையே ஆகக் கூடுதலான உடன்பாட்டைக் காணக்கூடிய முறை ஒன்றை இம்மகாநாடு வகுக்க வேண்டும் என ஆலோசனை கூறுவேன். நாடுகளின் கொள்கைகளைப் பற்றித் தார்மீக தீர்ப்பளிப்பதற்கு இம்மகாநாடு விரும்பாது என்றே கருதுகிறேன். சர்வதேச தர்மத்தின் பாதுகாவலர்கள் நாங்களே எனச் சொல்லிக் கொள்ளவில்லை. எங்களது நடுநிலைமைக் கொள்கையினால் மற்றைய நாடுகளிலும் பார்க்க நாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை.

எங்களை ஒன்று கூட்டியுள்ள லட்சியங்கள் சர்வதேசப் பிரச்னைகளில் எங்கள் சிந்தனையைக் கிளர்த்திக்கொண்டே இருக்கும் என நம்புகிறேன். ஆயினும், தேசிய நலனில் இருந்து தேசீயக் கொள்கை விலகியிருப்பதில்லை என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். போட்டி நலன்கள் தோன்றுதலும் சர்வதேச அரசியலில் இயற்கையே. கோட்

பாடுகளை மாத்திரம் நினைவுறுத்துவதன் மூலம் நலன்கள் சம்பந்தமாக ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கலாம் என நினைப்பதும் உண்மை நிலையல்ல. அதேபோன்று, இத்தகைய முரண்பாடுகள் தீர்க்கப்படாது இருத்தலும் ஆபத்துகரமானதாகவே இருக்கும். இதே மனோநிலையிலேயே எம்மை எதிர் நோக்கும் சில பிரச்னைகளைப்பற்றி எனது கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

சர்வதேச நெருக்கடி அதிகரித்து வருவதையும், கோஷ்டி சார்ந்த நாடுகளிடையே, குறிப்பாக வல்லரசுகளிடையே பரஸ்பர நம்பிக்கையும் விளக்கமும் அருகிவருவதையுமிட்டு பெரிய நாடோ, சிறிய நாடோ, செல்வம் மிகுந்த நாடோ, வறுமையடைந்த நாடோ பராமுகமாக இருக்க முடியாது. பெர்லின் பிரச்னையை ஒரு தனிப்பட்ட பிரச்னையாக நோக்கக் கூடாது. பிளவுபட்ட ஜெர்மனியின் பெரும் பிரச்னையில் ஒரு பாகம் என்பதையும் அந்நாட்டுக்கு ஒரு நிரந்தர சமாதான தீர்வைக் காண வல்லரசுகள் தவறிவிட்ட சூழ்நிலையையும் மனதிற் கொண்டே பெர்லின் பிரச்னையை அணுக வேண்டும்.

சமீப வருடங்களில் உலகின் பல்வேறு பாகங்களிலும் நெருக்கடி தோன்றியமைக்கு இரண்டு வல்லரசுகளுக்கும் இடையில் ஏற்படும் நலன் முரண்பாடே காரணம் என்பதைக் காணலாம். ஜெர்மனியில் போன்று வேறு எவ்விடத்திலும் இத்தகைய

**பெல்கிரேட் மகாநாட்டுக்குச் சென்ற பிரதம மந்திரி தனது விஜயத்தின் ஞாபகார்த்தமாக ஓர் மரக்கன்றை நடுகிறார்.**






பெல்கிரேட் மகாநாட்டில் கலந்து கொண்ட சகல பிரதம

மோதல் உச்சமாக இல்லை. இதில் சம்பந்தப்பட்டுள்ள இரண்டு அரசாங்கங்களும் ஒன்றுக்கொன்று எதிரான இராணுவ கூட்டுக்களைச் சேர்ந்துள்ளன என்பதையும், ஒவ்வொரு கோஷ்டியிலும் சக்தி வாய்ந்த நேசநாடுகள் பின்பற்றும் கொள்கையையே அவை ஒவ்வொன்றும் அண்டி நிற்கின்றன என்பதையும் காண்கிறோம். இரு ஜெர்மன் நாடுகளிடையேயுள்ள பிளவையகற்ற வழியில்லையா ? இப்பிளவை ஏற்படுத்திய இரு வல்லரசுகளின் நலன்களையும் சமரசப்படுத்த முடியாதா ? சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் சட்ட ரீதியான வாதாட்டங்களை வலியுறுத்திக் கொண்டிருக்கும் வரை இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது என்பது எனது கருத்து. ஜெர்மன் அரசாங்கங்களின் சட்ட அந்தஸ்தைப்பற்றி எங்கள் கருத்தொன்று உண்டு. மேற்கு பெர்லினில் மேற்கு வல்லரசுகளின் படைகள் இருப்பதற்குள்ள உரிமை, அவ்வப் பிரிவுகளுக்குச் செல்வதற்குள்ள உரிமை சம்பந்தமாக நாங்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். எனினும் அவற்றை இங்கு கூறும் உத்தேசமில்லை. சட்ட சம்பந்தமான அம்சங்களைப்பற்றி வாதாடுவதன் மூலம் தீர்வுகாண முடியாது என்பது எங்கள் கருத்து.

சென்ற யுத்தத்தில் கிடைத்த பேறுகளில் ஒன்று தான் இந்த ஜெர்மன் பிரச்னை. எவ்வளவு சீக்கிரத்தில் இந்த இரண்டு ஜெர்மனிகளையும் ஒன்றுபடுத்தும் பிரச்னை தீர்க்கப்படுகிறதோ அவ்வளவிற்கு நாடுகளிடையே நல்லுறவு வளர வாய்ப்பு ஏற்படும்.

எல்லாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு திருப்திகரமான தீர்வு இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பது குறித்து வருத்தம் அடைகிறோம். அச்சமும்,



மந்திரிகளும், இவ்வாறு படம் பிடித்துக்கொண்டனர்.

மனக்கோணல்களும் தீர்வு காண்பதற்குத் தடையாக அமைந்துள்ளன. இவற்றில் சில உண்மையானவை; சில கற்பனையானவை. எனவே இப் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், சமரச நோக்குடனும் அணுகி ஒரு தீர்வு காணவேண்டும். இன்று ஜெர்மனியில் நிலவும் சூழ்நிலையை இராணுவ தீரத்தையும் உறுதியையும் பரீட்சிக்கும் களமாகக் கொள்ளக் கூடாது. சர்வதேச முன்னேற்றத்துக்கும், அரசியலுக்கும், சமாதானத்துக்கும் ஏற்பட்டுள்ள சவாலாகவே அதனைக் கொள்ளவேண்டும்.

சர்வதேச நன்னம்பிக்கை பிறப்பதற்கு முதற்படியாக வல்லரசுகள் இராணுவ நடவடிக்கைகள் எதிலும் இறங்குவதில்லை எனவும் பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது எனவும் பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும் என நாங்கள் கருதுகிறோம். ஜெர்மனியில் உள்ள வெளிநாட்டுப் படைகளை வாபஸ், பெறுவதற்கும், ஜெர்மனியில் இராணுவம் இல்லாதிருக்கச் செய்வதற்கும் வல்லரசுகள் இணங்க வேண்டும். சமாதான முறையில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு கிழக்கு–மேற்கு நாடுகளிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு வல்லரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தகைய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாவதற்கு இரு ஜெர்மனிகளும் கலந்து கொள்ளுதல் அவசியம். ஒருதலைப் பட்சமாக உரிமைகளையும் கடமைகளையும் உதறியெறிவதன் மூலம் ஜெர்மன் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணமுடியாது. என்ன உரிமைகள் கடமைகள் இருந்த போதிலும் அவை யதார்த்த நிலைக்கேற்ப மட்டுப்படுத்தப்படலாம் என்பதனையும் வல்லரசுகள் உணர வேண்டும்.

ஜெர்மன் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் மாத்திர மல்லாது, ஜெர்மனி மீண்டும் இராணுவ பலம் பெறுவதையிட்டு அச்சம் அடையும் நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலும், மேற்கூறிய அடிப்படையில் ஜெர்மனியை ஒன்று படுத்தத் தீர்வுகாணலாம் என நாங்கள் கருதுகிறோம். அரை நூற்றுண்டுக்குள்ளே இரண்டு உலக யுத்தங்களினால் உலகம் சின்னுபின்னப்பட்டு விட்டது. மூன்றுவது உலகயுத்தம் ஒன்று வந்து மனித குலத்தையும் அதன் நாகரிகத்தையும் அழித்துவிட அனுமதிக்க முடியாது. திருப்திகரமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும். நெருக்கடிகளிலிருந்தும், யுத்த அபாயத்திலிருந்தும் விலகி, நிரந்தர சமாதானத்தை நோக்கிச் செல்வதானல் பல்வேறு நாடுகளின் முரண்பட்ட நலன்கள் நிறை வேறக்கூடிய சமரச தீர்வு காணப்பட வேண்டும்.


குடியேற்ற ஆட்சிமுறை அடியோடு மறைய வேண்டும் என இலங்கை தொடர்ந்து வாதித்து வந்துள்ளது. குடியேற்ற ஆட்சி தார்மீக அடிப்படையில் முறை கேடானது, அரசியல் ரீதியில், காலம் கடந்தது என மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்தை நாங்களும் ஆதரிக்கிறோம். கடந்த காலங்களில் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பூரண சுதந்திரம் பெற்ற நாடுகளாக மிளிர்ந்துள்ள போதிலும், குடியேற்றப் பிரதேசங்களைக்கொண்ட சில அரசுகள் சில சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டு அவற்றை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. தூய நோக்கங்களைப் பேசிக்கொண்டு, முரட்டுத் தனத்தையும், அடக்கு முறையையும் அவ்வாட்சியினர் கடைப்பிடிக்கின்றனர். இத்தகைய அரசுகள் அப்பட்டமான உண்மைகளைக் காண மறுப்பதனுலே மக்கள் துயரமடைவதுடன், பகையும் வெறுப்பும் தோன்றுகின்றன. இந்நிலைமை சமாதானமாக உடனிருந்து வாழ்வதற்கு உகந்ததல்ல என்பதுடன், அது உலக சமாதானத்துக்கும் ஓர் ஆபத்தாக இருக்கும்.

குடியேற்ற ஆட்சியின்கீழ் உள்ள நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குதல் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பதினைந்தாவது கூட்டத் தொடரில் ஒரு முக்கிய பிரகடனஞ் செய்யப்பட்டது. சுதந்திரமற்ற பிரதேசங்களில் குடியேற்ற ஆட்சியை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரேரணை கூறியபோதிலும், அதற்கு ஒரு திகதி நிர்ணயிக்கப்படவில்லை. அப்பிரேரணையை சாதனைப்படுத்துதல் பற்றிப் பரிசீலனை செய்தல் இம்மகாநாடு கவனிக்க வேண்டிய அலுவல்களில் ஒன்று.

எமது காலத்தில் ஆயுதபரிகரணம் ஒரு மிக முக்கிய பிரச்னை. நாடுகளிடையே நன்னம்பிக்கை தோன்றுதற்கும், யுத்த அபாயம் குறைவதற்கும் இப்பிரச்னைக்குச் சீக்கிரத்தில் தீர்வு காணவேண்டும். நாடுகளிடையே நல்லுறவு சீரடைதல், எதிர்கால சமாதானம், உலகின் பாதுகாப்பு முதலானவற்றைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் இரு வல்லரசுகளிடையே நிலவும் பூசல்களை ஒழித்தல் ஆகியவற்றைக் காட்டும் எல்லைக்கல்லாக ஆயுத பரிகரணம் விளங்கும். இந்நாச கருவிகளை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படும் பெருந் தொகையான பணம் அனைத்தும் உலகின் பல்வேறு நாடுகளில் சமூக பொருளாதார அபிவிருத்திக்குச் செலவிடப்படலாம்.

துரதிர்ஷ்ட வசமாக உருப்படியான பயன் எதுவும் ஏற்படவில்லை. ஆயுத பரிகரணம் சம்பந்தமாக ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்தக் கூட வல்லரசுகளிடையே நிலவும் பயமும் சந்தேகமும் தடையாக நிற்கின்றன. பூரண, பொது ஆயுத பரிகரண ஒப்பந்தம் ஏற்படுவதன் அவசியத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். அதுவும் துரித கட்டங்களில் சாதிக்கப்பட வேண்டும்.

ஆயுத பரிகரணம் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகிறது என்பது ஒவ்வொரு கட்டத்திலும் செம்மையாகப் பரிசோதிக்கப்படவேண்டும். இத்தொடரில், இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஆயுத பரிகரணம் சம்பந்தமாகக் கூறப்பட்டுள்ளதை இம்மகாநாட்டிற்கும் எடுத்துக் கூறுவேன். இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் சைப்பிரஸ், கானு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளும் அக்கூற்றில் பங்கு கொண்டிருந்தன. அவ்வறிக்கையில் கூறப்பட்ட வழிகளின்படியே செம்மையான சர்வதேச ஒப்பந்தம் ஏற்பட முடியும் என நாங்கள் அந்த நேரம் உணர்ந்தோம். ஆயுத பரிகரணம் பற்றிய காமன்வெல்த் பிரதமர்களின் அறிக்கை கூடிய விரைவில் ஆயுத பரிகரணப் பேச்சு வார்த்தைகள், யுத்த சாதனங்களைப் பூரணமாக ஒழிக்கும் நோக்கத்துடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியது. இவ்வறிக்கை பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களிடையேயும் விநியோகிக்கப்பட்டது. அணு ஆயுதப் பரிசோதனை பொது ஆயுத பரிகரணம் முதலானவை பற்றிய ஆயுத பரிகரணப் பேச்சு வார்த்தைகள் துர்ப்பாக்கியவசமாக நின்று விட்டன. அதைவிடமோசமான விஷயம் சோவியத் ரஷ்யா மீண்டும் அணு ஆயுதப் பரீட்சையை ஆரம்பித்திருப்பதாகும்.



பிரதம மந்திரி பெல்கிரேட்டிலிருந்து இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் தன்னை வரவேற்க வந்தவர்களுக்கு நன்றி செலுத்துகிறார்.

நாடுகளின் நலன் முழுவதும் சமாதானத்தில் தங்கியிருப்பதால், பூரண, பொது ஆயுத பரிகாரணத்தை ஏற்படுத்தக்கூடியவகையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்குமாறு வல்லரசுகளுக்கு நாம் ஒரு வேண்டுகோள் உடனடியாக விடுக்க வேண்டும். மண்டல சார்பற்ற நாடுகளில் ஒன்றையும் ஆயுத பரிகாரணக் கமிஷனில் சேர்த்துக்கொண்டால் இத்தகைய பேச்சு வார்த்தைகளுக்கு உதவியாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகள், நோக்கங்களுக்கு மாறாக மண்டலசார்பற்ற நாடுகளின் இம்மகாநாடு நடந்து கொள்ளாது. அவற்றுக்கு உறுதுணையாகவே இம்மகாநாடு நிற்கும். ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபனம் நிறுவப்பட்ட பின்னர் அதன் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை, கணிசமாக அதிகரித்துள்ளது. பெரும்பாலான உறுப்பினர் ஆசிய-ஆபிரிக்கக் குழுவிலிருந்தே வந்துள்ளனர். அந்நாடுகள் பொதுவாக மண்டலசார்பற்ற கொள்கையையே பின்பற்றுகின்றன. இந்த ஸ்தாபனத்தின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் பூண்டிருந்த கண்ணியத்தையும் செல்வாக்கையும் போக்கிவிட்டது. அதன் விளைவாக அந்த ஸ்தாபனத்தின் அதிகாரத்தைப் பங்கப்படுத்த சில அங்க நாடுகள் பயமுறுத்துகின்றன. இந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்டவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உள்ளது. எல்லோரினதும், குறிப்பாகச் சிறிய நாடுகளின் நன்மைக்காக அந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்தி நிலைநாட்டவேண்டும்.


இந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதற்கு அதன் சாசனத்தில் சில அடிப்படை மாற்றங்களைச் செய்ய நாங்கள் விரும்புவோம். எனினும், பெரும் வல்லரசுகளுக்குள்ளே உடன்பாடு இல்லாமையினால் இது கஷ்டமாகியுள்ளது. சீன மக்கள் குடியரசுப் பிரதிநிதிக்கு அங்கம் கொடுக்கத் தவறியமையும் இம் முட்டுக்கட்டை தோன்ற உதவியுள்ளது. நற்கருத் தோங்கி, ஐக்கிய நாடுகள் சபையில் சீனுவுக்குரிய சட்டபூர்வமான ஸ்தானம் அளிக்கப்படும் என மனப்பூர்வமாக நம்புகிறோம்.

அண்மையில் பொதுக்காரியதரிசி பதவி மிக்க கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. பொதுக் காரியதரிசியின் பதவியை மாற்றி அதே அதிகாரத்தைக் கொண்ட மூவரை ரத்து அதிகார உரிமையுடன் நியமிக்க வேண்டும் என சோவியத் ரஷ்யா ஒரு புதிய பிரேரணையைக் கொண்டு வந்துள்ளது. இதே அடிப்படையில் மூன்று உதவிப் பொதுக்காரியதரிசிகளை நியமிக்கலாம் என மற்றொரு யோசனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் கொங்கோ நிலைமை விஷயமாக பொதுக் காரியதரிசி தவறுகள் இழைத்திருந்த போதிலும், நாங்கள் பொதுக் காரியதரிசி பதவி சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டுள்ள இரண்டு யோசனைகளையும் ஆதரிப்பதற்கில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, மற்றைய சபைகள் முதலியன பணிப்பவற்றை நிறைவேற்றும் பூரண நிர்வாக அதிகாரம் பொதுக் காரியதரிசிக்கு இருக்க வேண்டும் என்றே நாங்கள் கருதுகிறோம். அத்துடன், பொதுக் காரியதரிசி பதவியும், அதன் அதிகாரமும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதும் எங்கள் கருத்து. இதனை, பொதுக் காரியதரிசிக்குத் தெளிவான உத்தரவுகள் கொடுக்கும் வகையில் பாதுகாப்புச் சபையை புனரமைப்பதன் மூலம் சாதிக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும் இதர சபைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய அங்கத்துவத்தைப் பிரதி பலிப்பனவாக இல்லை. சீன மக்கள் குடியரசின் பிரதி நிதித்துவம் சம்பந்தமாக ஒரு திருப்திகரமான தீர்வு கண்ட பின்னர், ஆசிய ஆபிரிக்கக் குழுவினருக்கு அதிக பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் அச் சபைகளின் அங்கத்துவ அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என நாங்கள் கருதுகிறோம்.

சர்வதேச சூழ்நிலைபற்றி நாம் கருத்து வெளியிடும்போது பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமமற்ற பொருளாதார அபிவிருத்தி முதலியன கணிசமான முக்கியத்துவம் பெறுகின்றன. அபிவிருத்திக்குறைவான நாடுகளில் பெரும்பான்மையானவை மண்டல சார்பற்றகொள்கையில் நம்பிக்கை கொண்டிருத்தல் ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. பொருளாதாரத் துறையில் அவற்றை எதிர்நோக்கியுள்ள பெரும் பொறுப்புக்களை அவை நன்கு உணர்ந்துள்ளன. இப்பொறுப்புக்களை நிறைவேற்றுதற்குத் தம்மிடம் உள்ள ஓரளவு வளங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையையும், அவை அறிந்துள்ளன. பொருளாதார ஏற்றத் தாழ்வின் காரணமாகவே அரசியல் சித்தாந்த கோஷ்டிகளிடையே நெருக்கடி நிலவுகிறது என்பதையும் இந்நாடுகள், உணர்ந்துள்ளன. அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கும் இடையில் நிலவும் வித்தியாசம் இருக்கும் வரை, நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு மிக அதிகம். அதிகம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் தம் பெரும் வளங்களை இராணுவ செலவுக்கு ஒதுக்குவதனால் இத்தகைய நெருக்கடி மேலும் உயர்கிறது. மாறாக, இந்நெருக்கடி குறைக்கப்பட்டால், அதனால் விளையும் சேமிப்பு அபிவிருத்தி குறைவான நாடுகளுக்குப் பொருளாதார உதவியாக அளிக்கப்படலாம்.

இங்கு வந்துள்ள நாடுகள் பலவற்றில் அபிவிருத்தி அலுவல்கள் துரிதமடைந்து வருகின்றன. ஆயினும், பல நாடுகளில் அபிவிருத்தியின் துரிதம் ஜனத்தொகை அபிவிருத்தியின் விகிதத்துக்கு ஒத்ததாக இல்லை. அப்படி ஒத்ததாக இருந்தாலும்கூட, உலகின் மற்றைய அதிக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படும் வளர்ச்சிக்கு அது இணையாகமாட்டாது. சம அபிவிருத்தி அடைதல் துரிதப்பட வேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகள் இப்போது மெதுவாகச் செல்ல வேண்டும் என்றோ,அபிவிருத்தி பின்னடையவேண்டும் என்றோ அபிப்பிராயப் படுதல் அர்த்தமற்றது. ஆகவே அபிவிருத்திக் குறைவான நாடுகளின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதலே சிறந்த மாற்று வழியாகும். உலக மக்களிடையே அரசியல், பொருளாதார தொடர்புகள் அதிகரிப்பதனால் ஒப்பிட்டு நோக்குதல் தவிர்க்க முடியாததாகிறது. இதன் விளைவாக அதிகரித்து வரும் நனவுகளில் விரக்தியும் புகுத்தப்படுகிறது. இதற்கான தீர்வு, அபிவிருத்தி குறைவான நாடுகளின் கையிலேயே உள்ளது. நாம் நமது நாடுகளின் உற்பத்தி சக்தியை அதிகரித்து, முதலீட்டு வாய்ப்புக்களைப் பெருக்கி, பொருளாதார அபிவிருத்தியைத் திட்டமிட்டுச் செய்தல் அவசியம். இதற்கு எங்களின் முழுச் சிரத்தையும் அவசியம். அத்துடன் அதிக அபிவிருத்தி எய்திய நாடுகளின் உதவியும் எங்களுக்குத் தேவை. உதவிகள் கிடைக்கவே, செய்



இரத்மலானை விமான நிலையத்தில் பிரதம மந்திரியை அவரது சகோதரி கட்டித் தழுவி வரவேற்கிறார்.

கின்றன. எனினும், இன்றுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமாயின், அத்தகைய உதவிகள் பரந்த அளவில் அளிக்கப்பட வேண்டும். அதிர்ஷ்டவசமாக இப்பிரச்சினையின் உத்வேகம் பல நாடுகளில் உணரப் பட்டுள்ளது. நாடுகளிடையே பரஸ்பர விளக்கம் வளர்தற்கு இன்னும் என்ன செய்யலாம் என்பதை இம்மகாநாடு பரிசீலனை செய்யலாம்.

இம்மகாநாட்டு விஷயங்கள் சம்பந்தமாக நான் சொல்ல வேண்டியவற்றை அநேகமாகச் சொல்லி விட்டேன். எனினும், எனது உரையை முடிப்பதற்கு முன்னர் ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும். அதாவது, உலகில் இப்போது யுத்தத்தை மனக்கலக்கமின்றி எதிர்நோக்கக்கூடிய நாடு எதுவும் இருக்க முடியாது எனத் திடமாக நம்பு கிறேன். அணுக் கதிரியக்கத்துக்கு உள்ளாகி தனது குழந்தைகள் நடைப் பிணமாகி அழிவதை உலகில் உள்ள எந்த ஒரு தாயும் நினைத்துப் பார்த்துத் தாங்கிக்கொள்ள முடியும் என ஒரு கணமேனும் நான் நம்பமாட்டேன். யுத்தத்தை விரும்பாத பலகோடி சாதாரண மக்களினால் விசுவாசமும் அதிகாரமும் மிக்க பதவிகளில் அமர்த்தப்பட்ட வல்லரசுகளின் அரசியல் ஞானிகள் அணு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் பெற்றிருப்பதாக நினைத்துக் கொள்ள எவ்வித உரிமையும் இல்லை. ஒரு வாழ்க்கைப் போக்கைப் பாதுகாக்கவோ, ஒரு அரசியல் சித்தாந்தத்தை விஸ்தரிக்கவோ, மட்டற்ற அழிவு சக்தியைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை.

(24 ம் பக்கம் பார்க்க)

# சிற்பாசாரி திரு. செ. இராமகிருஷ்ணன் அவர்கள்


**தென்னிந்திய சிற்ப முறைப்படி திருவடிவங்களை அமைக்கும் ஆற்றலைப் பாராட்டித் தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டவர்.**

**(குல. சபாநாதன்)**

வட இலங்கையில் சமய, சமூக, முத்தமிழ் விருத்தி மன்றங்கள் பல இருக்கின்றன. ஆண்டு நிறைவு விழா நடாத்துவதும் பத்திரிகைகளில் விழா விவரங்களைப் பிரசுரிப்பதுமே பெரும்பான்மையான சபைகள் செய்துவரும் தொண்டாகும். ஆனால் யாழ்ப்பாணப் பிரதேச கலைமன்றம் போன்ற ஒரு சில சங்கங்கள் கலை விருத்திக்குத் தொண்டாற்றிவருவதைப் பாராட்டாதிருக்க முடியாது. இச்சங்கம் கலையரசு கே. சொர்ணலிங்கம், நாட்டுப்பாடல் வல்லுநர், திரு. மு. இராமலிங்கம், சங்கீத பூஷணம் என். சண்முகரத்தினம், ஓவிய வல்லுநர் திரு. எஸ். ஆர். கனகசபை, நாதசுர வித்வான் எஸ். பி. எம். திருநாவுக்கரசு, சிற்பாசாரி திரு. செ. இராமகிருஷ்ணன், நடனக் கலைஞர் திரு. ஏரம்பு சுப்பையா ஆகியோரைக் கௌரவித்து தங்கப்பதக்கம் வழங்கி பொன்னாடை போர்த்துக் கௌரவித்தமை தமிழ்க் கலைவிருத்திக்கு ஊக்கமளித்ததாகவே கருதப்படும்.

பதினைந்தாம் நூற்றாண்டிலே ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரை இராசதானியாக்கி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை நடு நாயகமாக வைத்து, வடதிசையில் சட்டநாதர் கோயிலையும், கிழக்குத் திசையில் வெயில் உகந்த பிள்ளையார் கோயிலையும், தென்திசையில் கைலாயநாதர் கோயிலையும், மேற்றிசையில் வீரமாகாளியம்மன் கோயிலையும், சிங்கள அரசன் வீதியே பண்டார தன் பகைவர்களுக்கஞ்சி வட இலங்கைக்கு ஓடி யாழ்ப்பாண அரசனிடம் சரண் புகுந்து, பின்னர் தன் படையினரிடையே ஏற்பட்ட சந்தேகப் பேயினால் யாழ்ப்பாணத்தரசன் படையினால் தாக்குண்டு இறந்தபோது அவனைக் கௌரவிக்கு முகமாகக் கட்டப்பெற்ற பூதராயர், கோயிலையும் அமைத்தார்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் பணிபுரிய பல்வகைத் தொழில் புரியும் குடும்பங்களை ஒவ்வொரு வீதியிலும் குடியேற்றி வைத்தார். சிற்பத் தொழில் புரிபவர்கள் வாழ்ந்த இடம் கன்னார் தெரு என்றழைக்கப்பட்டது. இந்தத் தெருவின் கிழக்குப் பக்கத்திலேதான் அடியார்க்கு நல்லார் குளம் உண்டு. இக்குளத்தருகிலே மலசலம் கழிக்கும் கக்கூசுகள் இப்பொழுது உண்டு. ஊரிலுள்ள குப்பைகளையெல்லாம் லொறிமூலம் கொண்டுவந்து குவிக்கும் குப்பைத் தொட்டியாக அடியார்க்கு நல்லார் குளம் காட்சியளிப்பதை யான் பார்த்து மனம் வருந்தினேன். அடியார்க்கு நல்லார் குளம் குப்பைத் தொட்டியாக மாறியிருப்பதை நோக்கும்போது, நம் நாட்டு மக்களே யாழ்ப்பாணத்தரசர்களும் அமைச்சர்களும் செய்த தருமங்களைப் பேணிக் கௌரவிக்காதிருக்கும் போது, பிறர் கௌரவிக்கவில்லையெனக் குறைகூறுவதால் என்ன பிரயோசனம் உண்டு. இனிமேலாவது யாழ் நகரசபை இப்புராதன இடங்களைப் பாதுகாக்க முயலுமென எதிர்பார்க்கிறோம். இந்தத் தெருவிலேதான் புகழ்பெற்ற ஆயுள்வேத வைத்தியர் கஸ்தூரியார் வளவு உண்டு. ஆயுள்வேத வைத்திய இரத்னம் திரு. **முத்துக்குமாரு**, அவர் மகன் திரு. **மு. கதிரவேலு**, இவருடைய மைத்துனர் டாக்டர் பசுபதி, வைத்தியர் பராசசிங்கம் ஆதியோர் வாழையடி வாழையாக வைத்தியப் பணி புரிந்து வருகின்றனர். கஸ்தூரியார் புகழை நினைவூட்டும் நோக்கத்துடன் கன்னார் தெரு இப்பொழுது


**விஸ்வ பிரம்ம ஸ்ரீ திரு. செ. இராமகிருஷ்ணன், அவர்கள்.**



கஸ்தூரியார் தெரு என மறு நாமமிடப்பட்டுள்ளது. கஸ்தூரியார் வளவுக் கண்மையில் உள்ளது சிற்பாசாரி **திரு. செ. இராமகிருஷ்ணன்** அவர்களின் இல்லம்.

சில வருடங்களுக்கு முன்னர் என் தாயார் மேலைக்கரம் பொன் சண்முகநாதன் ஆலயத்தில் ஓர் ஆறுமுக உற்சவ மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து வைக்க வேண்டுமென்று விரும்பினர். என் தாயார் வீடு சண்முகநாதன் கோயிற்றிருக்குளத்தையடுத்துள்ளது. என்னுடைய பெற்றோர் 1907 ம் ஆண்டு தொடக்கம், அதாவது யான் பிறந்த ஆண்டு தொடக்கம் திருக்கார்த்திகை விழி வினைத் தம் இயல்புக்கேற்ப செய்துவரும் விரதம் பூண்டிருந்தனர். என் தகப்பனர் காலஞ் சென்ற பின்னா என் தாயாரே இவ்விழாவைத் தொடர்ந்து செய்து வருகிறர். வேலணைத் தீவில் முருகமூர்த்தி கோயில்கள் பல இருப்பினும் ஒன்றிலாவது சண்முகமூர்த்தம் கிடையாது. எனவே சண்முகமூர்த்தி ஒன்றைத் தன் சீவிய காலத்திலேயே தான் வணங்கும் கோயிலில் பிரதிஷ்டைசெய்து பார்த்துத் தொழவேண்டும் என்பது என் தாயாரின் விரதமும், விருப்பமும் ஆக விருந்தன. யான் ஊருக்குப் போகும்போதெல்லாம் அடிக்கடி என்னிடம் முறையிடுவது வழக்கம். அரசாங்க சேவையில் இருந்துகொண்டு கோயிலில் சண்முகமூர்த்தி பிரதிஷ்டை செய்துவைக்க என்னல் முடியக்கூடிய காரியமோ என்று என் உள்ளம் சொல்லியது. ஆனல் தாயாரின் விருப்பத்தை நிறைவேற்ற என்னிடம் பணம் இல்லை. இவ்வித் தர்ம சங்கடமான நிலையில் திருக்கார்த்திகை விழாவுக்காக யான் மேலைக்கரம்பனுக்குச் சென்றிருந்தபொழுது, என் தாயார் விடாப்பிடியாக நின்றுகொண்டார். “இம்முறை ஒழுங்கு செய்துவிட்டே போகவேண்டும்” என்று வற்புறுத்தினர். “என்னிடம் ஒரு சதமாவது மிச்சமில்லை அம்மா” என்று உள்ளதை உள்ளவாறே சொன்னேன். காசைப்பற்றி கவலைப்படாதே. இதில் 750 ரூபா இருக்கிறது. மிச்சக்காசு என் நகைகளை விற்றுத் தருகிறேன். என்னுடன் இந்த நகைகள் வரப் போகின்றனவா” என்று குத்திக் காட்டினர். என் பெரும் பிழையை உணர்ந்தேன். என் தாயாரின் வீட்டுச் செலவுக்காக யான் மாதந்தோறும் அனுப்பிய பணத்தில் மிச்சம்பிடித்து ஒரு தகரப்பெட்டியில் சேமித்து வைத்திருந்த தொகைகான் அது என்பதை உணர்ந்து வெட்கத்தால் தலைகுனிந்தேன்.

உடனேயே எங்கள் குடும்ப வைத்தியர், **ஆயுள் வேத “தினகரன்” திரு. மு. கதிரவேலு** அவர்களிடம் சென்று என் விருப்பத்தைக் கூறினேன். நான் சென்றபொழுது எத்தனையோ நோயாளர் எனக்கு முன்னரே சென்று காத்திருப்பதைக் கண்டேன். எனக்குப் பின் வந்தவர்கள்கூட எனக்கு முன் மருந்தெடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். என்னைச் கடைசிவரை மறித்து வைத்திருந்தார்கள். கடைசியில் என்னுடன் பேசத் தொடங்கினர்கள்; முதலிலே ஈழநாட்டுக் கோயில்களைப்பற்றி யான் “கலைமகள்” பத்திரிகையில் 20-25 வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரைகளைப் பாராட்டினர்கள். வைத்தியஞ் செய்யவே இரவுபகலாக விழித்திருந்து வீடுகளுக்குச் செல்லும் வழக்கமுடைய **திரு. கதிரவேலு** வைத்தியர் கலைகளை படிக்க எப்படி நேரம் மிச்சம்பிடித்துக் கொள்கிறர் என்று ஆச்சரியப்பட்டேன். பின்னர் ஆயுள்வேத ஏட்டுச் சுவடிகளை அச்சிட வேண்டும் என்றும், அத்துறையில் தாம் முயன்று வருவதையும் கூறினர். இவையெல்லாம் முடிந்த பின்னர்தான் “வந்த விஷயம் என்ன” என்று கேட்டார். விஷயத்தைச் சொன்னேன். சிறிது நேரம் சிந்தித்துவிட்டு என்னையும் கூட்டிக்கொண்டு வெளியே வந்தார். அதே தெருவில் வைத்தியர் வீட்டுக் கண்மையில் இருந்த **இராமகிருஷ்ண ஆசாரி**




**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குச் செய்து கொடுத்த விக்கிரகம்**

வீட்டுக்குத் தாமே சென்று எனது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும்படி சொன்னார். நான் பக்கத்தில் இருப்பதால் அடிக்கடி இவர்களை நினைவூட்டிக் கொள்வேன். இதற்காக நீங்கள் கொழும்பிலிருந்து அடிக்கடி வரவேண்டியதில்லை யென்று என் உள்ளத்தில் அடித்துக்கொண்டிருந்த சந்தேகத்தையும் போக்கிவிட்டார்கள். அன்றுதான் திரு. **இராமகிருஷ்ண ஆசாரியவர்களை** நேர்முகமாகக்காண நேர்ந்தது. அவர் விபூதி தரித்து, தம் வெள்ளை உள்ளத்தைக் கரிய மேனியால் மூடிக் காட்சியளித்தார். நெருப்புடன் விளையாடுவதால் அவர் மேனி கருகியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் உள்ளம் அப்படியே சுத்த வெள்ளைதான். பயபக்தியுடன், பணிபுரியும் பண்பும், கல்வியறிவும், இன்சொல்லும், விருந்தினரை உபசரிக்கும் அன்பும் ஒருங்கு சேர்ந்து **திரு. இராமகிருஷ்ண ஆசாரியாரை** இலங்கைத் தமிழ் மக்கள் பாராட்டுமாறு தூண்டிவிட்டதில் வியப்பொன்றுமில்லை. இவ்விதம் ஏற்பட்ட தொடர்பு பின்னர் நெருங்கிப் பழக வழி கோலியது. கோயில்களைப் பற்றியோ விக்கிரகங்களைப் பற்றியோ எனக்கிருக்கும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள **திரு. இராமகிருஷ்ணன்** அவர்கள் வீட்டுக்கே செல்வேன். எவ்வளவு வேலையிருந்தாலும், என்னைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் வரவேற்று உடையாடி மகிழ்ந்து கைகூப்பி வணக்கஞ் செலுத்தி வழியனுப்பிவைக்கும் வழக்கத்தை ஒவ்வொரு முறையும் அவதானித்துள்ளேன். எத்தொழிலைச் செய்தாலும், உண்மையான அறிவுடனும் தூய்மையான உள்ளத்துடனும் அன்புடனும் அத்தொழிலைச் செய்து வருபவர்களை உலகம் பாராட்டாதிருக்க முடியுமா. எனவே **கலைப்புலவர் திரு. க. நவரத்தினம்** போன்ற கவின் கலை அறிஞர்கள் வட இலங்கைச் சிற்பாசாரிகளைப் பாராட்டத் தொடங்கினார்கள். இவர்களுள் தலைசிறந்தவர்தான் **திரு. இராமகிருஷ்ணன்.**

சில மாதங்களுக்கு முன்னர் பண்டாரநாயக்கா மாவத்தையில் (முன்னாள் தட்டாரத் தெரு) உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் முன்னேஸ்வர தேவஸ்தானம் பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களைப் போதகாசிரியராகக் கொண்டு நடைபெற்றது. இந்தக் கும்பாபிஷேகத்தில் ஸ்தபதியாகக் கலந்து கொண்ட விஸ்வ பிரம்மஸ்ரீ செ. இராமகிருஷ்ண ஆசாரியவர்கள் தமது குடும்பத்துடன் கொழும்புக்கு வந்திருந்தார்கள். அப்

**வேறொரு சண்முகமூர்த்தி திருவுருவ வேலை நடைபெறுகிறது.**




பொழுது வெள்ளவத்தையிலுள்ள எங்கள் குடிசைக்கும் வந்திருந்தார்கள். அச்சமயத்தில் அவர்களிடம் பொலநறுவையில் அண்மையில் கண்டெடுக்கப் பெற்ற விக்கிரகங்களின் போட்டோக்களைக் காட்டி எனக்கிருந்த சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்த முடிந்தது. சிற்ப விஷயமானால் தமது நேரம், போவதே தெரியாமல் கலந்துரையாடிக்கொண்டிருப்பார்கள். இக்கலைஞரைப் பற்றி யாழ்ப்பாணப் பிரதேச கலைமன்ற கலைக் கைப்பணி விழாமலர் (1960) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:—

சிற்பாசாரி திரு. இராமகிருஷ்ணன் கொழும்பில் வாழ்ந்த திரு. ஜெகநாத ஆசாரியாரின் மகனாக 1900 ம் வருடம் அக்டோபர் மாதம் 20 ந் திகதி பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களது சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றார். பின், வண்ணார்பண்ணையிலிருந்த தமது சகோதரியின், கணவர் திரு. வி. நாகலிங்க ஸ்தபதியாரிடம் சிற்பத் தொழிற்கலையை முறையாகக் கற்றார். திரு. நாகலிங்க ஸ்தபதியார், தென்னிந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய சுவாமிமலை குருசாமி ஸ்தபதியாரின் மாணவராவர்.

இப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள சிற்பாசாரியர்களுள் அநுபவத்திலும் சாஸ்திர அறிவிலும் சிறந்து விளங்குபவர் திரு. இராமகிருஷ்ண ஆசாரியே என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். சிற்ப வடிவங்களைத் திறமையுடன் அமைப்பது மாத்திரமன்றி, ஆலய நிர்மாண விதிகளிலும் நல்ல அறிவு படைத்துள்ளவர். யாழ்ப்பாணத்தில் சிறந்த சைவாகம சாஸ்திர விற்பன்னராக விளங்கும் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் இவரது சிற்பநூல் அறிவிற்கும், ஆலய அமைப்பு விதி ஞானத்திற்குஞ் சிறந்த மதிப்பை அளித்துவருவதே இவரது ஆற்றலுக்குப் போதிய சான்றாகும்.

திரு. இராமகிருஷ்ணன் அண்மையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு இரண்டு வெள்ளி வாகனங்களை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இவரால் அமைக்கப்படும் விநாயகர் வடிவங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தன. வெள்ளியில் திருவாசிகள் அமைப்பதிலும், அங்கிகள் செய்வதிலும் திறமையுடையவர். இவரால் செய்யப்பட்ட திருவடிவங்கள் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள சைவ ஆலயங்களிற் காணப்படுகின்றன. சிற்ப நுட்பங்கள் பொருந்திய நடராச வடிவங்களையும், சண்முக சுப்பிரமணிய வடிவங்களையும் அமைக்கும் ஆற்றலுள்ளவர். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நடராஜ வடிவம், இவர் செய்த சிறந்த சிற்ப வடிவங்களிலொன்று. இவரது சிற்ப அறிவையும், அநுபவத்தையும், பயன்படுத்திக் கொள்வது சிற்பத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கடமையாகும். திரு. இராமகிருஷ்ண ஆசாரியவர்கள் நீடூழி வாழ்ந்து கலைத்தொண்டு புரிய எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக.



இராமகிருஷ்ண ஆச்சாரி செய்த சண்முகமூர்த்தி திருவுருவம் மேலைக்கரம்பண் கோயிலில் உள்ளது.

# ஹிந்து தேவாலயங்கள்


(சில்பாசார்ய ரேவதி குப்புஸ்வாமி)


நாமரூபமில்லாத ஏகன் இறைவனுக்குப் பெயரையும் உருவத்தையும் கொடுத்துப் பலவாக்கியபின், அன்னவருக்கு ஏற்படுத்தப்பட்ட கோயில்களே தேவாலயங்களாகும். சாதாரணமாக, ஒருவரது ஆன்மார்த்த பூஜைக்காகவுள்ள பூஜைப் பெட்டியோ அல்லது வீடுகளில் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள சுவாமி அறைகளோ தேவாலயங்களெனப்படுவதில்லை. இதற்கென்று வகுக்கப்பட்டதோர் முறையில் எழுப்பப்பட்ட கோயில்களையே தேவாலயங்கள் என்று குறிப்பிடுகிறோம்.

இந்து சமய முதநூல்களெனக் கொள்ளப்படும் வேதாகமங்களில், இந்த வகையான ஆலயங்களைப் பற்றி வேதங்களில் ஒன்றும் சொல்லப்படாமல், ஆகமங்களில் மட்டுமே இவை பற்றி விபரங்கள் தரப்படுகின்றன. ஆகம நூல்கள் **கர்ஷணாதிப் பிரதிஷ்டாந்தம்**-பூப்பிரதேசத்தை உழுது, சுத்தப்படுத்தி, அஸ்திவாரம் இடுவது முதலாக ஆலயம் எழுப்பி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யும்வரை, பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம் பிரதிஷ்டை முதலாக உத்ஸவம் வரைக்கும் என்று வகைப்படுத்திக் கூறப்புகும்போது, ஆலய நிர்மாணம் பற்றியும், விக்கிரக லக்ஷணங்கள், ஸ்தாபன முறை, இன்னும் ரதம், மஞ்சம், வாஹனாதிகள், தடாகங்கள் என்பவை பற்றியும் விபரமாகவும், சில சுருக்கமாகவும் சொல்லிப் போகின்றன. ஆகமங்கள் தவிர சில புராணங்களும் ஆலயங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை எடுத்துச் சொல்லுகின்றன. மானஸாரம் என்ற சிற்பநூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அலஹபாத் ஸர்வகலாசாலை ஸம்ஸ்கிருதப் பேராசிரியர் **ஸ்ரீ பிரசன்ன குமார ஆச்சார்யா** அவர்கள் தரும் பட்டியலில் சில்ப விஷயங்கள் சொல்லப்படுகின்ற நூல்களென்று கீழ்க்கண்டவற்றின் பெயர்கள் வருகின்றன. சுப்ரபேதாகமம், மத்ஸ்யபுராணம், ப்ருஹத்-ஸம்ஹிதை, கிராணத்ந்த்ரம், மயமதம், காசியபரின் அம்ஸுமத்பேதம், ஸ்கந்த புராணம், கருடபுராணம், அக்நி புராணம், நாரத புராணம், பிரஹ்மாண்டபுராணம், வாயுபுராணம், பவிஷ்யபுராணம், காமிகாகமம், காரணாகமம், அர்த்தமாஸ்த்ரம், சுக்ரநீதி, மானுஷ்யாலய சந்திரிகா என்பவைகள்.

ஆலயங்களைப் பற்றி-ஒரு பிரதேசத்தைத் தேர்ந்தெடுப்பது முதல் ஆலயங்களை முறையாகவும் அழகாகவும் எழுப்புவது பற்றித் தொழில் முறையில் ரொம்பவும் விரிவாகச் சொல்வன சில்பசாஸ்திரங்களே. மானஸாரம், மயமதம், காசியபம், விஸ்வகர்மீயம் எனப்பட்ட சில்பநூல்களை ஆதாரமாகக் கொண்டே சில்பிகள் ஆலயங்களைக் கட்டுகிறார்கள். எல்லாத் தொழில் முறைச் சாஸ்திரங்களிலும் உள்ளது போலவே சில்பசாஸ்திரங்களும் பரிபாஷைச் சொற்கள் நிறைந்தும், அவைகளை வழிவழியாகக் கற்றுத் தேர்ந்த விற்பன்னர்கள் விளங்கப்படுத்திச் சொன்னாலல்லாமல் இலகுவில் பொருள் புரிந்து கொள்ள முடியாத சொல்லமைப்புகளுங் கொண்டனவையாயிருக்கின்றன. சில்பநூல்களும் ஆகமங்கள் போல் ஒன்றுக்கு மேற்பட்டனவையாய், ஒவ்வொருவரால் இயற்றப்பட்டனவையாய், ஒரே விஷயத்தை ஒவ்வொரு மாதிரியாகச் சொல்லிக்கொண்டு போகின்றனவையாயுமிருக்கின்றன. இதனால், ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொருவர் வகையறா

**தம்பலகாமம் கோவில்**






ஊன் உடம்பு—ஆலயம் (ஒப்புவமை)—படம் : ச. சிவகுரு நாதன்


என்ற, பிரசித்தியடைந்தவோர் சில்பியின் வம்சத் தாரிடத்திலும், ஒரு குறிப்பிட்ட சில சில்பநூல்களே தெளிவாக விளக்கந்தரக்கூடியனவாக அநுபோகத் தில் இருந்து வருகின்றன. என்றாலும், இன்றைய நிலையில் வம்ச குடும்பச் சொத்தான ஒரு நூலுக்கு முழுவதும் நிச்சந்தேகமான முறையில் பொருள் விளங்கப்படுத்தக்கூடியவர்கள் இல்லை யெனலாம். சுருதி, யுக்தி, அநுபவம் என்ற இந்த மூன்றையும் வைத்தே அன்றும் இன்றும் சில்-பிகளால் ஆல யங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

2

தத்துவார்த்தங்களுடன் கற்பிக்கப்பட்ட தோற்றத் தைக் கொண்ட மூர்த்தங்களிலொன்றைப் பிரதான மூர்த்தியாகக் கொண்டு, அந்த மூலமூர்த்திக்கு கரு வறையையும், அதனையடுத்து எல்லை (கோபுர) வாயி ல்வரை மண்டபங்களையும், சுற்றிவர அடுத்தடுத்தாய் பிராகாரங்களையும், மதில்களையும், மதில் வாயில்கள் தோறும் கணக்குப்படி தலங்களுடனும் அதன்படி உயர்ந்துமிருக்கின்ற கோபுரங்களுடனும் கூடியதாய் தேவாலயங்கள் கட்டப்பெறுகின்றன.

மனுஷ்ய உடம்பில் சிரசு, கழுத்து, மார்பு என்ற தொடுப்பை ஒத்ததாய், கர்ப்பக்கிருஹம் என்ற கரு வறையைச் சிரசாகத் தொடங்கி, கோபுரம் பாதங்க ளாகக் கொண்டு இந்த மண்டபங்கள் அமைகின்றன. உலகத்திலுள்ள எல்லா ஹிந்து தேவாலயங்களும் இப்படித்தானமைந்திருக்க வில்லையெனினும், சைவ சித்தாந்தக் கோட்பாடுகளுக்கும் ஆகம தாந்திரீக சம்பிரதாயங்களுக்கும் நிலைக்களமாகவுள்ள தென்-இந்தியாவிலும், இலங்கையிலும் அநேகமாக மேற் சொன்ன முறையையொட்டியே தேவாலயங்கள் அமைந்திருக்கின்றன. சில சில குறிப்பிட்ட காரணங் களுக்காக மட்டுந் தவிர, பெரும்பாலான ஆலயங்கள் கிழக்கு நோக்கியே கட்டப்பட்டிருக்கின்றன. சாதாரண மாக ஒரே ஒரு மூர்த்தமே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருவறையையும், உரிய மற்றைய மண்டபங்கள் பிர காரங்கள் யாவையுங் கொண்ட ஆலயம் ஒருவகை. மூர்த்தங்களை-சிவமாகவும் சக்தியாகவும் பிரித்து, அவற்றுக்குத் தனித்தனியே, அருகருகே கருவறை களையும், தொடர்ந்து மண்டபங்களையும் பூட்டி இப்படி இரண்டு வரிசை ஆலயங்களையும் ஒரே வெளிப்பிர காரமதினுள்ளடக்கி, ஒரே ரதவீதியைக் கொண்ட தாய் அமைகிற ஆலயம் ஒரு வகை. மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் ஆலயம் இந்த வகையைச் சார்ந்ததே. முதலாவது சொன்னவகையில் சிவ மூர்த்தத்தை ஸ்தாபித்து, மஹா மண்டபமென்னப் பட்டதின் கண்ணத்திலே சக்திக்கு (தெற்கு நோக் கியபடி) ஒரு கருவறையைச் சமைந்துக் கொள்வது இன்னொரு வகை. கடைசியாகக் குறிப்பிட்ட வகை யில்தான் பெரும்பாலான தேவாலயங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன.


திருக்கேதீஸ்வரத்திலுள்ள சோழர் காலத்து நந்தி.



3

பிரதான கருவறையின் பிரதான பாகத்துச் சுற் றளவு விதிப்படி (ஆயாதிப் பொருத்தமெனப்படும்) ஒரு கணக்கில் அமைய, வட்டம் அரைவட்டம், சதுரம் என்ற அமைப்பில் மேற்சொன்ன கருவறை களைக் கொண்டதாய் ஆலயங்கள் அமைந்திருக் கின்றன. தமிழ்நாட்டுக் கோவில்களில் அநேகமாக எல்லாம், விஸ்தீரண அமைப்பிலும்சரி, கருவறை கள், அவற்றுடன் தொடுக்கப்பட்ட மண்டபங்கள் இவைகளின் அமைப்பிலும் சரி சற்சதுரமாகவே அமை திருக்கின்றன. நாற்சதுரக் கருவறையின் ஒரு பக் கத்து அளவை அடிப்படை அளவாகக் (**Unit of measure**) கொண்டுதான் மேற்கொண்டுள்ள மண்டபங்கள், பிரகாரங்கள் யாவும் அளந்து கணிக்கப்படுகின்றன. இந்த அடிப்படை அளவு ஒரு தண்டமெனக் கொள்ளப்பட்டு, இந்த ஒரு தண்ட அளவுக்குக் குறைவாகவே—ஒருஆலயத்தின் மற்றைய கர்ப்பக்கிரஹங்களுக்கு அளவுகள் கொள் ளப்படுகின்றன. பிரகாரங்களில் சுற்றவர அமைக் கப்பட்ட இந்த மாதிரிச் சிறிய கர்ப்பக்கிருஹங்களில் பிரதான மூர்த்தியின் அளவுக்குக் குறைவு பட்டதாக பரிவாரங்கள் எனப்படும் ஏனைய தெய் வங்கள் வைக்கப்பட்டிருக்கும். நடுநாயகமாக பெரிய கோயிலினதும், பரிவாரக் கோயில்களி னதும், உள்கூடான அடிப்பாகம் (கருங்) கல்லா

(24 ம் பக்கம் பார்க்க)




சிவன் கோவிலின் மாதிரிப் படம்.

1 விமானம், அதன் மத்தியில் காணப்படுவது கர்ப்பக்கிருகம் கர்ப்பக்கிருகத்தின் மத்தியில் காணப்படுவது இலிங்கம்

2 மண்டபம். 3. நந்தி 4 த்வஜஸ்தம்பம். 5. பலிபீடம்.

6 கோபுரம் (கிழக்கு) 7 கல்யாணமண்டபம் 8. நடேசரின் கர்ப்பக்கிருகம்.

9. பார்வதியின் கர்ப்பக்கிருகம் (இது தெற்கு கோபுரத்திற்கு முன்பு இருக்கவேண்டியது)

10 சுப்பிரமணியரின் கர்ப்பக்கிருகம். 11. பிள்ளையாரின் கர்ப்பக்கிருகம்.

12. குளம். 13. மதில் 14 தெற்கு கோபுரம். 15. தேர்.

16 தேரில் ஏறுவதற்கான படிகள் உள்ள ஏணி.

சிவன் கோவிலின் மாதிரிப்படம்—படம் : ச. சிவகுரு நாதன்

# யாழ்ப்பாணத்துப் பொற்கொல்லர்

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கைத் தமிழர்களின் தாயகமாகவும், இந்து கலாசாரத்தின் பிரதான உறைவிடமாகவும் விளங்குகின்றது. இலங்கைத் தமிழர்கள், தென்னிந்திய புராதன கலாசாரத்தின் எல்லா அம்சங்களும் வாழையடி வாழையாகக் கைவரப்பெற்று விளங்குவதோடு, காலத்திற்குக் காலம் கலை, இலக்கியம், நாடகம் என்னும் துறைகளில் அழியாத பெருமை வாய்ந்த பல பொருட்களையும், நூல்களையும் ஆக்கியுமுள்ளவர்கள். யாழ்ப்பாணத்துக் கைத்தொழில்கள் யாவும், அவ்வவற்றிற்கெனவமைந்த வெவ்வேறு குலத்தைச் சேர்ந்த குடும்பங்களால் செய்து வரப்படுகின்றன. இவை யாவும் குடிசைத் தொழிலாகவே அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இன்னும் தங்கத்திலும், வெள்ளியிலும் நகைகளும் வேறு நுட்பம் வாய்ந்த உபகரணங்களும் செய்யவல்ல வினைஞர்கள் ஏராளமாகக் காணப்படுவர். அவ்வகுப்பார் பொற்கொல்லர்—தட்டார்—என அழைக்கப்படுவர்.

## தமிழகப் பொற்கொல்லர்

பண்டைத் தமிழ் நாட்டில் பொற்கொல்லர் மிகச் சிறந்த வினைஞர்களாக விளங்கினர்களென்பதை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களின்மூலம் நாம் அறிகின்றோம். அக்காலம் பொற்கொல்லர் மாணிக்கம், நீலம், வைரம், முத்து, மரகதம் முதலிய இரத்தினங்களின் இலக்கணங்களை நன்கு தெரிந்திருந்தார்கள். இரத்தின பரீட்சையைப் பற்றிய விபரங்கள் அடங்கிய பல நூல்கள் பண்டைத் தமிழ் நாட்டிலிருந்தன வென்பதற்குச் சான்றுகள் சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலும் காணப்படுகின்றன. மகளிர் உச்சி தொடங்கி கால் விரல்கள்வரை அணிந்த நகைகளின் வகைகள் சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் கூறப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் அணிகள், தங்கத்தாலும், வெள்ளியாலும் மாத்திரம் செய்யப்பட்டனவன்று. தங்க அணிகளுக்குப் பலவித இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. இரத்தினங்கள் இழைத்த நகைகள் இன்றும் நாட்டில் உபயோகத்தில் இருக்கின்றன. ஆனால் இன்று நகைகளுக்குக் கல் இழைக்கும் விதம் பண்டைக் காலத்தில் இழைத்த முறைக்கு வேறுபட்டதாகும்.

## யாழ் நாடு

இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உள்ள தமிழ்ப் பொற்கொல்லர், பண்டைத் தமிழ் நாட்டுப் பொற்கொல்லர் பரம்பரையில் வந்தவர்களே யாவர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கத்திலும், வெள்ளியிலும் ஆபரணங்களையும், இதர பொருட்களையும் செய்வார்கள். வண்ணார்பண்ணை, நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரி என்னும் இடங்களில் ஏராளமாகக் காணப்படுகின்றனர். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னிருந்த பொற்கொல்லர், அரும்புவேலை (Granulated) சரிகை இழைப்பு வேலை (Filigree), கொத்து வேலை (Embossing), கல்லிழைப்பு வேலை, சங்கிலிப் பின்னல் வேலை முதலிய நுட்பமான வேலைகளில் மிகவும் புகழ்படைத்திருந்தனர். தமிழ்ப் பொற்கொல்லர் கீழ்க்கண்ட நகைகளைச் செய்வதில் திறமை பெற்றுவிளங்கினர்கள்.

### தலை நகைகள் :

நெற்றிவரி, உச்சிவரி, சூரியப்பிறை, சந்திரப்பிறை, ருக்கொடி, தாழம்பூ, வளைதாழம்பூ, சடைநாகம், கொண்டைப்பூ என்பன.

### காது அணிகள் :

கொப்புவாளி, முருகு, மயிர்மாட்டி, தோடு, கடுக்கன், காதுப்பூ, கறணைப்பூ, குமுடு என்பன.

### மூக்கு நகைகள் :

மின்னி, புலாக்கு, மூக்குத்தி என்பன.

### கழுத்தணிகள் :

கீச்சுமணி, உள்கட்டு, பட்டுமணி, கரியமணி, பூரான் அட்டியல், கல்லட்டியல், சரடு என்பன.

### கையணிகள் :

சிங்க முகக் காப்பு, கங்கணம், கொலுசு, சம்பு நாத வளையல், அழுக்காமையோட்டு வளையல் என்பன.

### பாத அணிகள் :

பாதசரம், தண்டை, கால்கொலுசு, பீலி மயிலடி, முன்தாங்கி, மீன்குஞ்சு என்பன.

**மார்பணிகள் :**

சரப்பளி, பதக்கம், பஞ்சாயுதம், முத்துமாலை, சங்கிலி, பவழமாலை, அவல்மாலை என்பன.

**அரை அணிகள் :**

அரைமூடி, சலங்கை, ஒட்டியாணம் என்பன.

யாழ்ப்பாணப் பொற்கொல்லரின் திறமையைப் பற்றித் தாமெழுதிய "**இலங்கை**" என்னும் நூலின்கண் **சேர். எமேர்சன் தென்னற்** என்பார் (1859) பின்வருமாறு கூறுகின்றார் :—

"**இன்றைய இலங்கை**" என்னும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டில் முடிசூட்டு விழா விசேஷ மலரில் "**இலங்கைக்கு விஜயஞ் செய்த அரச குடும்பத்தினர்கள்**" என்னும் கட்டுரையில் தமிழ் பொற்கொல்லர்களின் திறன்பற்றிச் சில விபரங்கள் தரப்பட்டுள்ளன. 1875 ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயஞ் செய்த வேல்ஸ் இளவரசசியாருக்கு இலங்கையிலுள்ள தமிழ் மாகாணங்களின் பெயரால் பலவிதமான இரத்தினங்கள் வழங்கப்பட்டதாக அக்கட்டுரையில் கூறப்படுகின்றது. அப்பொருட்கள் இலங்கையில் வழங்கப்பட்ட பரிசில்கள் யாவற்றினும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தனவாக இருந்தனவாம். (1953 மே–ஜூன் இதழ். பக்கம் 6).

**திரு. எம். சுப்பிரமணியப்பத்தர்**

அரும்பு வேலைப்பாட்டிலும் சரிகை இழைப்பு வேலையிலும் யாழ்ப்பாணப் பொற்கொல்லர் இலங்கையில் இன்றும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்குகின்றார்கள். அரும்பு வேலையிலும் சரிகை இழைப்பு வேலையிலும் மிகத் தேர்ச்சி பெற்றவராகிய **திரு. எம். சுப்பிரமணியப்பத்தர்** இன்றும் அவ்வேலைகளைத் திறமையுடன் செய்து வருகின்றார். 1952 ம் ஆண்டில் நடைபெற்ற அரும்பு வேலையில் முதலாம் பரிசைப் பெற்றார். 1934 ம் ஆண்டில் லண்டனில் நடந்த வெம்பிளிப் பொருட்காட்சியிலும் அவர் ஒரு தகமைப் பத்திரம் பெற்றார்.

தங்கத்திலும், வெள்ளியிலும் அழகிய கொத்து வேலைகள் அமைந்த நகைகளையும் இதர பொருட்களையும் செய்யவல்லார் இன்றும் நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகின்றனர். **யாழ்ப்பாணப் பொற்கொல்லர்கள் நகைகள் மாத்திரம் செய்வதில் தேர்ச்சியுடையோரன்று. வெள்ளிப் பன்னீர் செம்பு, சந்தனகும்பா, தட்டம், சித்திரங்கள் அமைத்த பெட்டிகள், கெண்டிகள், லோட்டாக்கள், முதலியனவற்றையும், கோயில்களுக்குத் தேவையான வெள்ளி வாகனங்கள், திருவாசிகள், பீடங்கள், அங்சிகள் முதலியன வற்றையும் செய்வதிலும் தேர்ச்சியுடையோர்களாவும் விளங்குகிறார்கள். நல்லூர் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதலிய ஆலயங்களில் யாழ்ப்பாணப் பொற்கொல்லர் இற்றைக்கு 50 ஆண்டுகட்கு முன் செய்த பல வெள்ளி வாகனங்களும், உபகரணங்களும் கல்லிழைத்த நகைகளும் காணப்படுகின்றன.**

பலவிதமான நுட்பங்களும், கலை வனப்பும் பொருந்தி விளங்கிய இக்–கைத்தொழில் இன்று குன்றி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏராளமான பொற்கொல்லர் இக்காலத்து நவநாகரிக முறைகளில் ஈடுபட்ட மக்களின் விருப்பத்திற்கிணங்கி தமிழ் நாட்டு பண்டைய கலை இலக்கணங்களுக்கு அமையாத புதிய நகைகளைச் செய்வதில் ஈடுபட்டுள்ளார். பழைய அரும்பு வேலைகளையும், சரிகை இழைப்பு வேலைகளையும் விரும்புவார் இன்று நாட்டில் இல்லாமையால் அவ்வேலைகள் மறைந்து விட்டன வென்றே கூறுதல் வேண்டும்.

வருவாயை மாத்திரமே நோக்கமாகத் தொழில்கள் ஆற்றப்படின் கலை வளர்ச்சி ஏற்படாதென்பது அறிஞர் கூறும் உண்மை. கலை வனப்பும், அழகும் சாத்திரமும் வாய்ந்த ஆபரணங்களைச் செய்யும் வழக்கம் இன்று நாட்டில் இல்லாது மறைந்ததற்கு காரணம் பொற்கொல்லர் அன்று. நாட்டு மக்கள் தங்கள் சொந்தக் கலைகளிலும், மலைப் பொருட்களிலும், கைத்தொழில் அபிவிருத்தியிலும், காட்டிவரும் அபிமானக் குறைவே இந்நிலைக்குக் காரணமாகும்.

சுதந்தர இலங்கை தனது சொந்தக் கலைகளைப் போற்றி வளர்ப்பதே சுதந்தரத்தால் அடையக் கூடிய பயனாகும். எமது நாட்டில் நாம் அன்னியர்களைப் போல் உண்டு, உடுத்து, பூண்டு வாழ்தல் அறிவுடமையன்று. நாட்டின் கலைகள் வளர வேண்டுமாயின் கைத்தொழில் விருத்தி அடைய வேண்டுமாயின், நாட்டு மக்கள் தமது நாட்டுப் பொருட்களை உபயோகித்து, நாட்டுக் கைத்தொழிலை ஆதரிக்க வேண்டும்.

**யாழ்ப்பாணத்தில் அழிந்து கொண்டிருக்கும் பொற்கொல்லரின் தொழிலை புத்துயிரளித்துக் காத்தல் அரசினரதும், தலைவர்களதும், பொது மக்களினதும் கடமையாகும். எமது நாட்டுக் கலைப் பொருட்களை பிற நாட்டு மக்கள் தேடி வாங்கக் கூடிய விதத்தில் நாம் காரியங்களை நிர்வாசம் செய்தல் வேண்டும். எமது நாட்டுக்கு வரும் பிற நாட்டு மக்கள், எமது கலைப் பொருட்களை இலகுவில் பெறக்கூடிய வசதிகளை நாம் ஏற்படுத்தல் வேண்டும்.**

## மட்டக்களப்பு மான்மியம்

"மட்டக்களப்பு மான்மியம்" என்னும் இந்நூல் மட்டக்களப்பின் பண்டைய சரித்திரத்தைக் கூறுவது. யாழ்ப்பாணத்திற்கு "யாழ்ப்பாண வைபவமாலை"; அதுபோல மட்டக்களப்பிற்கு "மட்டக்களப்பு மான்மியம்" அமைந்து கிடக்கின்றது. இடை இடையே வரலாறுகள் பொதிந்து கிடக்கும் இந்நூல் ஏட்டு வடிவத்தில் இதுவரை அடங்கிக் கிடந்ததுண்டு. ஏடுகளும் கோயில்களில் அடங்கிக் கிடந்தன. செட்டிபாளையம் புலவர் கணபதிப்பிள்ளை அவர்கள் தந்துதவிய ஏட்டினையும் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுபரன் கோயிலின் ஏட்டின் பிரதியையும் ஒப்பு நோக்கி செவ்விதெனக் கண்ட வடிவத்தில் இந்நூல் ஸ்ரீலங்காமூலம் வெளிவருகின்றது. அதன் ஆசிரியருக்கு நன்றி. கடுக்காய்முனை பாலிப்பொடி ஆசிரியர் அவர்கள் கொக்கட்டிச்சோலை ஏட்டின் பிரதியைத் தந்துதவினர்.

# மட்டக்களப்புச் சரித்திர இயல்

வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா

மட்டக்களப்பானது இலங்கையின் ஒருபகுதி. அது கண்டி நகரத்துக்கு நேர் கிழக்கும் மணற்றிடருக்குத் தென்கிழக்குமுள்ளது. இந்த மட்டக்களப்பு நீர்வள நிலவளங்களாலும் தீங் கனிச் சோலைகளாலும் பலவித பட்சிசாலங் களாலும் நான்குவித விலங்கீட்டங்களாலும் செழித்தோங்கும் கனிகளாலும் பிராதன சித்திர விசித்திரங்களாலும் உயர்ந்தோங்கும் மட்டக்களப்பின் சுகசெல்வங்களை நோக்கும்போது மதுசெரங்களை மதிள்களும் வாசனைதந்தும் மகிழ்ச்சியை ஊட்டும் மலர்களால் பாயும் விரிகடல் புவியென மேன்மைபெற்று வண்டுகள் புட்பத்தின் நறுக்களை வாரியுண்டு, கீதநாத சங்கீதங்களை மீட்டித் தேன்களைச் சொரிந்தும் தேங்குகள் நிறைந்து முண்டகஞ் செவ்வந்தி யிருவாச்சி, மல்லிகை, தாழை, மகிழம், பூகம் பாதிரி, கோங்கு, செண்பகமென்னும் நறுமலர்கள் அலந்து சூழப்பெற்று மாட்சிமை தங்கிய பல நாமங்கள் சூட்டப்பட்டிருக்கும். அவையாவன:— மலையாளம் மலையர்குக நாடென்றும், நாகர் இயக்கர் நாகமுனை என்றும், வங்கர் மட்டக்களப் பென்றும் கலிங்கர் உண்ணரசி கிரியென்றும் சிங்கர் மண்முனை என்றும் பல நாமங்கள் சூட்டப்பட்ட நாட்டின் விபரங்களைப் பின்கூறப் படும் மட்டக்களப்புப் புராதன சரித்திரங்கள் எல்லாவற்றையும் கூறுவோமாகில் விசையனுடைய காலமும் அவர் மூதாதை கலிங்கர், கங்கர், சிங்கர், மறவர், மராட்டியர் என்னும் ஐந்து அரசர்களுடைய வம்சாவழியும் அவரவர்கள் சந்ததிகள் இந்நாட்டில் கலிங்கதேசம், வங்க தேசம், சிங்கபுரம், அசோககிரி, சோழநாடு, இராம நாடு, மலையாளம் இவையிலிருந்து குடியேறி அரசாண்டு முதன்மைபெற்றுச் சிறைதளங்களோடு வாழ்ந்து வந்த சரித்திரங்களையும் கூறவேண்டும். ஏனெனில் இவர்களே மட்டக்களப்பை மாட்சிமைப் படுத்திவந்தவரென்பதற்கு ஏதொரு ஐயமுமில்லை.

### விசயகுமாரன் வரவு—விசயன் சரித்திரம்

கலிங்க தேசத்து விதிகுதி அரசனுடைய மகள் விடமணி என்பவளை சுங்கதேசத்துத் தாட்டிக அரசனுடைய புத்திரன் மதிலோகனுக்குப் பாணிக்கிரகணஞ் செய்துவைத்தனர். அவர்கள் ஒரு புத்திரியைப் பெற்றனர். அப்புத்திரியினுடைய நாமம் சிறிமதி. அவள் பருவகாலமானபோது சிங்கனென்னும் நாமமுடைய ஒரு வேட்டுவனை மணந்து சிங்கவாகுவையும், சிங்கவல்லியையும் இரட்டைப் பிள்ளைகளாய்ப் பெற்றனள். சிங்கனென்பவன் பஞ்சவடியை அரசுசெய்யும்போது வேட்டைமார்க்கமாய் வர வங்கதேசத்துப் பூங்காவனத்தில் சிறிமதியைக் கண்டு தூக்கிக்கொண்டு போய் பஞ்சவடியில் கற்குகையில் ஒழித்து வைத்தான். வங்கதேசத்தையரசுபுரியு மதிலோகன் தனது புத்திரியைக் காணுதபடியால் தேடியுங் காணவில்லை. ஆனதால் மவுனத்துடனிருந்தான்.

இந்தச் சிறிமதி பஞ்சவடிதீரத்தில் உள்ள கற் குகையில்தான் இந்தச் சிங்கவாகுவைப் பெற்றது. சிலகாலத்தின்பின் சிறிமதிக்கும் சிங்கன் என்பவ னுக்கும் தர்க்கவாதம் வந்து சிங்கனைச் சிறிமதி விட்டுப்பிரிந்து தனது தந்தையிடம் இரண்டு புத்திரரோடு வந்து சேர்ந்தனள். மதிலோகனும் புத்திரியையும் அவள் புத்திரரிருவரையும் தாப ரித்துப் பிள்ளைகளை வளர்த்துப் பருவகாலம் வரச் சிங்கனை வரவழைத்துச் சிங்கவல்லிக்குப் பஞ்சவடிதீரத்தைப் பட்டங்கட்டி தனக்குப் பட்டத் துக்குப் புத்திரனில்லாமையால் சிங்கவாகுவுக்குச் சிங்கபுரத்தைப் பட்டங்கட்டி வாழ்ந்தான். சிங்க வாகுவும் சிங்கனின் சகோதரியின் புத்திரி விரகமணி என்பவளைப் பாணிக்கிரகணம் செய்து வாழுங்காலம் சிங்கவாகுவின் மனைவி விரகமணி என்பவள் விசையன் சமித்து என்னுமிருவரையும் ஒரு முறையிலே இரட்டைப் பிள்ளைகளாய்ப்பெற்ற னள். அதேபோல மூன்று முறை இரட்டை களாகப் பெற்றனள். விசயன் சமித்து முதல் புத்திரர்கள். விசயன் என்பவன் இளவரசு காலத்தின் தந்தையினுடைய அமைச்சலால் நீங்கி எழுநூறு வீரியர்களையும் தன்னோடு சேர்த்து யுத் தப் பரீட்சை பழகிச் சிங்கபுரத்தில் சில அட்டாதுட்டி களைச் செய்துவந்தான். நகரத்துப் பிரசைகள் சிங்கவாகுவினிடம் விசயனுடைய நிர்ப்பாக்கி யத்தைக் கூறினர். சிங்கவாகுவும் பட்டத்திற் குரிய புத்திரனை போதிலும் விசயன் பிரசை களை வருத்தியதையிட்டு மனவருத்தமுற்றுப் பட கோட்டும் மாலுமியை அழைத்து விசயனுடைய கெட்ட செய்கைகளைக் கூறிச் சுக்கான், பாய் மரம், தெண்டுதண்டு இல்லாத படகில் ஏற்றி அலை செறிந்த சமுத்திரத்தில் அலையவிடும்படி திட்டஞ் செய்தனன். அதனையுணர்ந்த மாலுமியும் சிங்க வாகுவின் கட்டளைப்படி விசயகுமாரனையும் அவன் தோழர் எழுநூறு பேரையும் ஒரு படகிலேற்றி வேறொரு படகில் அப்படகைப் பூட்டிப் பெருஞ் சமுத்திரத்தில் விட்டுத் தனது படகைக் கழற்றி எடுத்துக்கொண்டு கரைசேர்ந்து சிங்கவாகுவிடம் அறி வித்துத் தன்னிருப்பிடம் போனான்.

விசயனும் தோழர்களும் ஏறிய படகு காற்று மோதலாலடைந்து தென் சமுத்திரஞ் சார்ந்து மேடமாதம் புந்திவாரம் பரிதியின் சாயல் நேரத் தில் வட இலங்கையின் மணற்றிடலில் அடைந்தது. விசயனும் தோழர்களும் கரையிலேறிப் பார்க்கும் போது நாகர் குலத்தவரைக் கண்ணுற்றனர். விச யனும் அக்குலத்தவரை நோக்கி அரசியற்றும் இராசனை வினவியபோது காளிசேனன் என அறிந்து தந்தையாற் கொடுத்த ஆகாரப் பொருட்கள்குறைந் தபடியால் அக்குலத்தவர் விசயனுக்குந் தோழர் களுக்கும் கனிவர்க்கங்களைக் கொடுத்துப் பசி ஆற்றி விட விசயகுமாரனும் தோழர்களுடன் அரசனிருப் பிடந் தேடி முள்ளுத்தீவில் வந்து நாகர் குலத்துச் சிற்றரசனைக் கண்டு தனது சம்பவங்களைக் கூறி ஆகாரமுண்டு பரிசியிடத்தில் முதலரசனை வின வியபோது முதலரசர் அயோத்தியா புரியைப் பண் டைய நாளில் அரசு செய்த பரிதிகுல இரகுவமி சத்தைச் சார்ந்த காளிசேனனென்பவர் என்றும் அவருடைய இராச்சிய இடம் தென்னிலங்கையில் காளிதேசம் என்றும் கூறினன்.

பரிசியின் துணைவரோடு நாகர் படகிலேறிக் காளி தேசம் வந்து காளிசேனனைக் கண்டு சினேகங்கொண் டாடி இயக்கர் குலத்துக் குவேனியை மணந்து காளிசேனனுக்கு விசயனும் தோழர்களும் படை வீரர்களாக இருந்து மண்ணினுல் மாளிகையியற்றி வாழுங் காலம் காளிதேச பிரதானி வீட்டில் மண விருந்துக்காகக் காளிசேனன் விசயன் குவேனி யாவரையும் விருந்துக்கழைக்க, விசயன் தோழர் களைப் பார்த்துச் சொல்லுவது :—

அச்சபையிலிருக்கப்பட்ட காளிசேனன், பிர தானிகள், படைவீரர் யாவரையும் குவேனியினு டைய மாயச் சூழ்ச்சியினுலுறங்கச் செய்வேன். நீங்கள் முன்பின் யோசியாமல் எல்லோரையும் வெட் டிக் கொல்லுங்கள் என்று கூறி அச்சபைக்குச் சென்று விருந்துண்ணமுன் குவேனியால் எல் லோரையும் உறங்கச் செய்தான். தோழர்கள் அனை வரையும் வெட்டிக்கொன்றனர். பின்பு இலங்கை முற்றுக்குங் கிரீடாதிபனுகினன்.

**விசயனின் ஆட்சி**

விசயன் தென் இலங்கையில் ஒரு மலை நாட்டைப் பட்டணமாக்கி விசயதுவீபமென நாமஞ்சூட்டி, இலங்கை முற்றிலும் தந்தையினுடை சிங்கக் கொடியை உயர்த்திப் பட்டத்துத் தேவியாக வட மதுரையை அரசுபுரியும் வீரசோகனுடை புத்திரி விசாகியைப் பாணிக்கிரகணஞ் செய்து குவேனியை நீக்கி எழுநூறு தோழர்களைப் படைத் துணைவரா கவும், பிரதானி, சிற்றரசராகவும் இலங்கை பல திக்கினுமிருத்தி மணவாழ்வற்றவராயிருக்கும்படி திட்டஞ் செய்து ஆண்டு வருங்காலம் அரசுக்கு வந்து 38 ஆம் வருடம் தேகவியோகமடையுங் காலமறிந்து தந்தைக்குத் தம்பி சமித்துவை இலங் கைக்குப் பட்டங்கட்ட அனுப்பும்படி திருமுக மெழுதித் தனது தோழரில் உபத்தியன், அசயன், பந்துகாபயன், மூத்தசிவன், உத்திகன், மாமகா சீலன், சூரத்தீசன், அலேசனன் என்று ஒன்பது பேருடன் கொடுத்தனுப்பிவிட்டான்.

அவர்கள் திருமுகத்தைக் கொண்டு மண்ணுற்றுப் பதி சென்று வங்க தேசப் படகிலேறிச் சிங்கபுரம் போய் சிங்கவாகு தேகவியோகமான செய்தி அறிந்து அந்த நவ வீரர்கள் சமித்துவின் கையிற் கொடுத்தனர். சமித்துவும் இரு கரங்களாலும் வாங்கி வாசித்து அகமகிழ்ச்சி கொண்டு தந்தை மரண மடைந்ததும் சிங்கபுரத்தைத் தான் பரிபாலிக்கிறதாகவும் காலிங்க நகரத்தை அரசு புரியும் சிறிகேசவ சந்திரருடைய இரண்டாம் புத்திரன் சிறிகுலசேனனுக்குப் பட்டங்கட்டும்படியும் தந்தையினுடைய ஆணையரசு தன் கரத்திலிருக்கவேண்டுமென்றும் பதில் திருமுகம் எழுதிவந்த வீரரின் கையிற் கொடுத்து அனுப்பிச் சிறிகுலசேனனுடன் தனது படை வீரரில் நூற்றறுபது போர் வீரரையும் உடன் கொடுத்தனுப்பிவைத்தான்.

சிறிகுலசேனன் கலிங்கரிற் கலந்த வங்க குலமானபடியால் வங்ககுலப் படகிலே அனைவருமேறிக் காளிதேசத்திலிறங்கி விசயதுவீபத்தை அணுகி விசயனிடம் போய்ப் பாதபந்தனஞ் செய்து திருமுகத்தை விசயன் கையிற் கொடுத்தனர். விசயன் வாசித்து தனது தந்தை மாண்டதையிட்டு விசனமுற்றுச் சிறிகுலசேனனை வாழ்த்தி அவன் தந்தை சிறிகேசவசந்திரருடைய சுகசெய்திகளை வினவித் தந்தையின் துயரத்தை மாற்றிக் கலிங்கர், சிங்கர், வங்கர் என்னும் முக்குலத்தாரும் இலங்கையை எக்காலமும் அரசியற்றி வருவாரென நினைத்து உளங்களித்து சிறிசேனனைக் கமலங்களால் முழுக்காட்டிப் பட்டு வஸ்திரமுடுத்தி கரத்தில் தன்னுடைய செங்கோலைக் கொடுத்துச் சிரத்திலே நவரத்தினங்களால் இழைத்த முடியைத் தரித்து அரசாளும்படி திட்டப்படுத்திச் சில காலத்தின் பின் பரமபதம் அடைந்தான். விசயன் அரசியற்றிய காலம் 40 வருடம்.

திங்கள் வெண்குடை தவளச்சிறிகுலசேனன்றானும்
சிங்கனின் கொடி தளிர்க
திருவள ரிலங்கை நாட்டில்
வங்க ரத்தின குலத்தோன் செங்கோ லோச்சு
நாள் கலி பிறந்து
அங்கு வீராயிரத்து எண்ணூற்றறுபதாண்டே.

(தொடரும்)

## ஹிந்து தேவாலயங்கள்

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

லும், விமானமென்று சொல்லப்படும் மேல் பாகம் செங்கல், சுண்ணச் சாந்து இவைகளாலும் உருவாக்கப்படும். கோபுரங்களும், இப்படியே குடவரை என்று சொல்லப்படும் அடிப்பாகம் கல்லாலும், தலங்களென்று சொல்லப்படும் மேல் பாகம் செங்கல் சுண்ணச்சாந்தால் பலவிதமான பிரதிமைகளைக் கொண்டனவாகவும் அமைக்கப்படும். கல்லால் கட்டப்படும், பாகம் சிவபாகம் என்றும், செங்கல் சுண்ணச்சாந்தால் ஆக்கப்படும்பாகம் சக்திபாகம் என்றும் சொல்லப்படும். மேலே உயர்ந்து நிற்கும் விமானம், கோபுரங்கள் என்ற கட்டிடங்களின் உச்சியில் ஸ்தூபி எனப்படும் முடி பொருத்தப்பட்டிருக்கும். இந்த முடிகள் தங்க முலாம் பூசப்பட்டிருந்தாலும், ஆலயத்துக்கு இடி, மின்னலால் ஊறுகள் வராதபடி காப்பாற்றி நிற்பதற்காக, செம்பாலாக்கப்பட்டு உள்ளே வரகு தானியம் நிறைக்கப்பட்டிருக்கும்.

நந்தவனங்கள், தடாகங்கள், வாஹன சாலைகள், நானுவித மண்டபங்கள், மணிக்கூண்டுகள், வானுயர் கோபுரங்கள் பிராகாரங்கள், ரதவீதிகள் இவற்றுடன் கூடியதாய், நித்யோத்ஸவம், பிரம்மோத்ஸவம் முதலான வைபவங்களுடன் வருஷம் பூராவும் பொலிவுடன் விளங்கும் இத்தேவாலயங்களெல்லாம், ஆதியில் மனுஷனுக்கு மேம்பட்டவனுகக்கொள்ளப்பட்ட ஒரு தேவனுக்குரிய இல்லிடமாக மரத்தால் சமைக்கப்பட்ட ஒரு சிறு குடிலிலிருந்து காலக்கிரமத்தில் வளர்ச்சியடைந்தவையே என்று, இந்துமதம், விக்கிரகாராதனை, தேவாலயங்களில் அமைப்பு முதலிய விஷயங்களில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் தெரிவிக்கின்றுர்கள்.

## பெல்கிரேட் மகாநாட்டில் . . . . .

(11 ம் பக்கத் தொடர்ச்சி)


பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியிலோ, இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலோ யுத்த கோஷத்தைக் கிளப்புதல் சில சமயங்களில் பெரிய நாடுகளுக்கு ஒரு செலவுமிக்க அரசியல் விளையாட்டாக இருந்திருக்கலாம். இன்று, அகஸ்மாத்தாகவோ பீதியின் காரணமாகவோ பெரும் மோதல் ஏற்பட்டால் அதன் விளைவு சர்வநாசமாகவே இருக்கும். சமாதானமாக உடனிருந்து வாழ்வதைப் பற்றிப் பேசுகிறோம். சர்வதேச ஏவாயுதங்களை குறிபார்த்து நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கும் நாடுகள் எந்த வகையில் உடனிருந்து வாழ முடியும் ? இன்றைய, நவீன உலகில் முரண்பட்ட சித்தாந்தங்கள் உயிர்த்திருப்பதற்கு ஆயுதங்களே வேண்டியதில்லை என்ற முகப்பின்மீதே சமாதானமாக உடனிருந்து வாழ்தலின் முழு அடிப்படையுமே தங்கியுள்ளது.

ஐந்து, ஆறு நாட்களைக் கொண்ட குறுகிய காலத்துள் உலகப் பிரச்னைகள் அனைத்தையும் தீர்ப்பதில் வெற்றி காண்போம் என நாங்கள் எதிர்பார்க்கவும்

(30 ம் பக்கம் பார்க்க)

# மாந்தருள் சிறந்த மதியாபரணம்

குல. சபாநாதன்



திரு. கே. மதியாபரணம் அவர்கள்

" உயர் திரு. க. மதியாபரணம் அவர்கள் கொழும்பு விவேகானந்த சபையின் வளர்ச்சிக்கு அளப்பருந் தொண்டு ஆற்றியுள்ளார். இவர் செய்துள்ள சேவைக்கு சகல தமிழ் மக்களும் கடமைப்பட்டிருக்கின்றனர். அவருடன் நான் நெருங்கிப் பழக நேர்ந்தது முதல் அவர்பால் நன்மதிப்புக் கொள்ளத் தக்கவிதமாக அவர் நடந்துகொண்டார் ".

இவ்வாறு **சேர். அருணுசலம் மகாதேவா** அவர்கள் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் அச்சபையின் உபதலைவர் காலஞ்சென்ற **திரு. க. மதியாபரணம்** அவர்களின் உருவப்படத்தைத் திரைநீக்கஞ் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். **காலஞ்சென்ற திரு. க. பெருமாள்பிள்ளை** அவர்களின் உருவப்படத்தை **சேர். கந்தையா வைத்தியநாதன்** திரைநீக்கஞ் செய்து வைத்தார். இவ்வைபவத்திற்கு வழக்கறிஞர் **திரு. எஸ். சோமசுந்தரம்** அவர்கள் தலைமைவகித்தார். **சேர். கந்தையா வைத்தியநாதன்** பேசுகையில், திரு. மதியாபரணம் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை அங்கத்தவராக இருந்து ஆலயத் திருப்பணியினை அடிக்கடி கவனித்து அதன் திருத்த வேலைகளில் அக்கறை காட்டினுரெனவும், இப்பெரியார்கள் எவ்விதம் சமூக சேவைகளில் ஈடுபட்டிருந்தனரோ அவ்வாறே இளைஞர்களும் அவர்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றி சமய, சமூக சேவைகளில் ஈடுபட்டுழைக்க வேண்டுமெனவும் கூறினுர்.

### " மதி " மரஞ் சாய்ந்தது

ஈழத்தன்னை அருந்தவமியற்றி ஈன்றெடுத்த இணையிலாப் புதல்வன் **திரு. மதியாபரணம்** அவர்களை இழந்து தவிக்கின்றுள். மதிப்பிடற்கரிய மாணிக்க ஆபரணமாகத் திகழ்ந்த மதியாபரணத்தை இலங்கை மக்கள் இழந்து விட்டனர். இலங்கை வாழ் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களாகிய பல சாகியத்தாரையும் இனத்துவேஷமின்றிச் சகோதரர் போல மதித்து, அவர்களின் துன்பந் துடைத்து உதவி புரிந்து வந்த கற்பக தரு சடுதியிற் சாய்ந்து விட்டது. அவர்கள் யாவரும் இளைப்பாறி இன்புற்றிருக்கத் தண்ணிழல் தந்துதவிய மதிமரம் மறைந்து விட்டது.

கொழும்பு மாநகரிலே வர்த்தகத் துறையிலே சிறந்து விளங்கிய இலங்கைத் தமிழர் **உயர். திரு. க. மதியாபரணம்** அவர்கள் திடீரென இவ்வுலக வாழ்வை நீத்த செய்தி கேட்டுக் கலங்காத இலங்கையர் இல்லையெனலாம். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பதினைந்தாம் திகதி ஐயா அவர்கள் உயிர் நீத்த செய்தியை இலங்கை வானொலி மூலம் கேட்டபொழுது, என்னுல் நம்பவே முடியவில்லை. ஒருகால் இச்செய்தி பொய்யாயிருக்கக் கூடாதா என்று என் பேதைமனம் அங்கலாய்த்தது. ஆனுல் பத்திரிகைகளும் இத்துக்க சம்பவத்தைப் பிரசுரித்த பொழுது, மதியாபரணம் ஐயா அவர்கள் எங்களுக்குச் சொல்லாமலே சென்றுவிட்டார் என்பதை உணர்ந்து கலக்கமடைந்தேன். இவர் பிரிவை இவருடைய அருமை மனைவியும் மகள் பாலாவும் செல்வக் குழந்தைகளும் சுற்றமித்திரரும் எவ்வாறுதான் தாங்கிக் கொள்வார்களோ எனப் பெரிதும் கவன்

றேன். ஐடா அவர்கள் ஆஸ்பத்திரியில் சுகவீனமாகப் படுத்திருந்தபோதுகூட அவரைத் தரிசிக்கச் சென்றவர்களுடன் நகைச் சுவைததும்ப உரையாடியதை நினைந்து நினைந்து கவலைப்பட்டேன். ஐயா அவர்களை யானும் என் மனைவியும் ஆஸ்பத்திரியில் பார்க்கச் சென்றபொழுது, "நீர் எனக்குச் சுகமில்லையென்று சொல்லிவிட்ட ஆட்கள் எல்லாரும் எப்பவோ வந்துவிட்டார்கள், நீங்கள் இருவரும் இப்போதான் வருகிறீர்களா ?" என் றுஉரிமை பாராட்டிப் புன்சிரிப்புடன் எங்கள் இருவரையும் கேள்வி கேட்ட மதியாபரணம் ஐயா அவர்களை அன்றுதான் கடைசியாகப் பார்க்கிறேன் என்பதை யான் உணரமுடியவில்லை. "இன்னும் ஒரு கிழமைக்குள் வீட்டுக்கு வந்துவிடுவேன் ; ஆறுதலாகப் பேசிக் கொள்வோம்" என்று அவர் கூறிய ஆசை வார்த்தைதான் என் புத்தியை மழுப்பிவிட்டது. ஐயா அவர்களிடமும் அவர் அருமை மனைவி மக்களிடமும் விடை பெற்றுக் கொண்டு திரும்பும்போதுகூட, அவருடைய உள்ளன்பு வெளிக்காட்டத் தொடங்கியது "நீங்கள் எப்படி வந்தீர்கள். எனது காரிலேயே போகலாம்" என்று சொல்லித் தனது மனைவியைப் பார்த்தார். குறிப்பறிந்து நடக்கும் இயல்பு நிரம்பப்பெற்ற அம்மையார் உடனே எங்கள் இருவரையும் தங்கள் காரிலேயே வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி சொன்னுர்கள். ஆனுல் இனிமேல் இவ்வாறு எங்கட்கு உதவிபுரிய யார் உளர் என்பதை நினைக்கும்போது தான் பெரிய ஏக்கம் ஏற்படுகின்றது.

ஐயா அவர்கள் பிரிவை மனத்தாலும் நினைத்தல் முடியவில்லை ; வாயாலும் சொல்லல் முடியவில்லை. எழுத்தாலும் எழுத முடியவில்லை. என் ஊன், உடல், உயிர் எல்லாம் ஐயா அவர்களை நினைக்கும் போதெல்லாம் உருகுகின்றன. கண்ணீர் என் பார்வையை மறைக்கிறது. இக்கட்டுரையை எழுதத் தொடங்கவே என் கை நடுங்குகிறது. என் வாழ்வில் இருள் சூழ்ந்த போதெல்லாம் அறிவொளிகான்ற சூரியனை இழந்து விட்டேன். கற்பகதருவை இழந்து தவிக்கின்றேன். ஐயா அவர்கள் இருக்கும் போது எனக்குப் பணக்கவலை யெதற்கு என்று நான் பன்முறை என்னையே தேற்றியிருந்தேன். அவரே எனது எய்ப்பினில் வைப்பாகிய வங்கியெனக் கருதியிருந்தேன். ஆனுல் கொடுங் கூற்றுவன், மின்னுமல் முழங்காமல் இடிவிழுந்தது போல், எங்கள் மாணிக்கத்தை எங்களிடமிருந்து பிரித்தெடுத்துச் சென்று விட்டான். ஐயா அவர்களின் பிரிவை எவ்வாறு ஆற்றுவதெனத் தெரியவில்லை. ஆருத்துயரம் இஃது இன்று ஆறுமோ ? ஓராண்டில் ஆறுமோ ? என்றும் ஆருது. யான் உயிருடன் இருக்கும்வரை ஆருது ; ஆருது.

திரு. மதியாபரணம் ஐயா அவர்களுடனும் அவர்கள் குடும்பத்தினருடனும் கடந்த 34 ஆண்டுகளாக நெருங்கிப் பழகி அவர்களை நன்கு அறிந்து கொள்ளும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்ததை என் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். 1927 ம் ஆண்டு என்ற ஞாபகம். "இண்டர் மீடியற் சையன்ஸ்" பரீட்சைக்கு யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து தோற்றி என் தகப்பனுரின் வற்புறுத்தலின் பேரில் கொழும்பில் நின்றபோது கிளறிக்கல் சோதனையை வேண்டா வெறுப்புடன் எடுத்தேன். யாழ்ப்பாணக் கல்லூரியில் பேர்பெற்ற ஆசான் திரு. **ஹன்டி பேரின்ப நாயகம்** அவர்கள் அக்காலத்தில் 'ஹாஸ்ரல் வார்டனுக' இருந்தார். எனவே சுதந்திர சூழ்நிலையில் வளர்ந்த மாணவர்களாகிய நாங்கள் அரசாங்க சேவையில் வெறுப்புக் கொண்டது அதிசயமன்று. அவ்வருடம் மகாத்மா காந்தியடிகளை யாழ்ப்பாணத்தில் வரவேற்க திரு. பேரின்பநாயகம் அவர்களுக்கு உதவி புரிந்த மாணவர் குழுவில் யானுமொருவன். எனவே யாழ்ப்பாணத்திலோ சிங்கள நாட்டிலோ ஓர் ஆசிரியனுக இருக்க வேண்டுமென்பதே யான் கண்ட கனவாகும். ஆனுல் துரதிர்ஷ்டவசமாக இன்றர் சையன்ஸ் சோதனையில் குண்டடித்து, கிளறிக்கல் சோதனையிற் சித்தியடைந்தேன். என்றுலும் நான் சந்தோஷப்படவில்லை. மீண்டும் தொடர்ந்து படிக்கவே திட்டமிட்டேன். ஹன்டி மாஸ்ரரும் ஊக்கமளித்தார். 1927, டிசம்பர் மாதம் தொடக்கம் வித்தியாகந்தோருக்கு நியமிக்கப் பெற்றிருப்பதாக கொலோனியல் சக்கிடுத்தார் கடிதம் அனுப்பியிருந்தார். மீண்டும் மேற்படிப்புக்குத் தம்மிடம் வசதியில்லையென்று தகப்பனுரும் பெரிய தகப்பனுரும் கைவிரிக்கவே, வேறு வழியின்றி, கவலையுடன் என் பெரிய தகப்பனுர் **காலி சி. கா. சோமசுந்தரம்பிள்ளை** அவர்களுடன் கொழும்பு வந்து சேர்ந்தேன்.

கந்தோருக்குப் போக புத்தம் புதிய உடுப்புகள் தேவை. என் பெரிய தகப்பனுர் என்னைக் **கொழும்பு விவேகானந்த சபையில்** விடுதிச்சாலையில், சைவ ஆசார சீலராக விருந்த சிறுப்பர் **திரு. எஸ். இராசையா** அவர்கள் மேற்பார்வையில் என் விடுதிக்கு ஒழுங்கு செய்துவிட்டு, புறக்கோட்டையில் இருந்த **திரு. தம்பிப்பிள்ளை பிரதர்ஸ்** காரியாலயத்துக்குக் கூட்டிச் சென்றுர். இவர்களுடன் நெடுங்கால நட்பு பூண்டவர் என் பெரிய தகப்பனுர். காரியாலயத்தில், வெள்ளை சற்றின் காற்சட்டை கோற் அணிந்து அதற்கேற்ற ரை, ஷேட், சப்பாத்து அணிந்து தூய்மையான உடையுடன் வெள்ளைக்காரன் போல கொழு கொழுத்த தோற்றப் பொலிவுடன் காட்சியளித்தார் ஒருவர். இவர்தான் அந்நிய நாட்டிலிருந்து சரக்கு

கள் வரவழைக்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தமிழர் தாபனங்கள் சிலவற்றுள் ஒன்றான மெஸ் ஸேர்ஸ் தம்பிப்பிள்ளை பிரதர்ஸ் கம்பனியின் **மனேஜர் திரு. க. மதியாபரணம்** எனப் பின்னர் அறியலானேன். ஆங்கிலம் தலைகீழாகப் பேசினார். மேல் மாடியில் இந்தக் கம்பனி இருந்தது. கீழே சப்பாத்துக்குப் பேர்போன ரி. ஜி. எம். பெரேரா கம்பனி இருந்தது. என்னையும் என் பெரிய தகப்பனாரையும் கூட்டிக்கொண்டு, பெரேரா கம்பனிக்குட் போய், " தம்பி, உமக்கு விருப்பமான சப்பாத்து தொப்பி, கால்சட்டை எல்லாவற்றையும் தெரிந்தெடும் ' என்றார். இளங்கன்று பயமறியாது என்ற முறையில், யாழ்ப்பாணத்திலிருந்து முதன்முதலாக உத்தியோகம் பார்க்க வருபவர் கிறீச்சுக் கிறீச்சென்று சத்தம் வைக்கும் சப்பாத்துடனும், கசங்கிய காற்சட்டையுடனும், நீளம் அகலமில்லாத அழகற்ற ரையுடனும் காட்சியளித்து சிரேட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒரு வேடிக்கைப் பிராணியாகக் காட்சியளிக்கக் கூடாதென்ற அர்த்தமற்ற பெருமையால் உந்தப் பெற்று, விலையுயர்ந்த சப்பாத்துச் சோடியையும், ரையையும், ஷேட்டையும் வாங்கியபோது, என் பெரிய தகப்பனார் ஆச்சரியமுற்றார். நல்ல வேளையாக மதியாபரணம் ஐயா நம்மைக் காப்பாற்றினார். "இளம் பிள்ளைகள் ஸ்ரைலாகத்தானே உடுக்க வேணும். அவர் உழைக்கிற முதற் சம்பளக் காசில் ஒரு பகுதியை உடுப்பிலும் செலவழித்தால் உங்களுக்கென்ன" என்று மதியாபரணம் ஐயா கூறியதால், பணங் கொடுக்க வேண்டிய கஷ்டத்திலிருந்து என் பெரிய தகப்பனாரை மீட்டுவிட்டதுடன், என் பெரிய தகப்பனாரின் கோபத்திலிருந்து என்னையும் காப்பாற்றிவிட்டார். ஆகவே என்னிடம் ஒரு பணமுமின்றி, "இரவற் புடைவையில் இது நல்ல கொய்யகம்" என்ற முதுமொழிக்கிணங்க, மதியாபரணம் ஐயா அவர்களுடைய பெருங் குணத்தால் நான் அடுத்த நாள் வித்தியா கந்தோருக்குச் சென்று, சிங்களச் சகோதரர் " பனங்கொட்டை ஒன்று வந்துவிட்டது " என்ற தாக்குதலுக் காளாகாது, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றேன். பின்னர் சிங்கள உத்தியோகத்தர் பலர் என் சிநேகிதராகினர். அன்றியும் துரதிர்ஷ்ட வசமாக அந்தக்கந்தோரிலிருந்து நானகவே இளைப்பாறத் தீர்மானிக்கும்வரை என்னை வேறெந்தக் கந்தோருக்காவது, வேறு ஊருக்காவது மாற்றாமல் வித்தியாகந்தோரிலிருந்து தானேயான் இளைப்பாற நேரிட்டது. ஆகவே 1927 ம் ஆண்டு தொடக்கம் மதியாபரணம் ஐயா அவர்கள் இவ்வுலக வாழ்வை நீக்கும் இறுதிக் காலம்வரை நெருங்கிப் பழக நேர்ந்தது. ஐயா அவர்களுடன் மட்டுமல்ல அவருடைய மனைவி மக்களுடனும் நெருங்கி உறவுகொண்டாட நேர்ந்தது. நான் மணமுடித்தபின்னரும் என் மனைவியும் அவ்வாறே அவர்களுடனும் அவர் குடும்பத்தினருடனும் நெருங்கிப் பழக நேர்ந்தமை எனது பாக்கியமாகவே கருதி வருகிறேன். பின்னர் ஐயா அவர்கள் அலெக்சான்ட்ரு றேட்டில் வீடு ஒன்றை வாங்கி யான் இருந்த அலெக்சான்ட்ரு ரெறேஸ் வீட்டுக்குக் கூப்பிடு தூரத்தில் வசித்துவந்தபடியால் அடிக்கடி போய் வருவதுண்டு. வருடந்தோறும், ஜனவரி மாதத் தொடக்கத்தில் ஒரு கலண்டரும், டயறியும், வேறு ஏதாவது மணிபேர்ஸ் போன்ற பொருட்களும் தவறாமல் தந்துவிடுவார்கள். அன்புரிமை காரணமாக ஒருமுறை யானே ஐயா வீட்டுக்குப் போய் எனது டயறி எங்கே என்று சாடையாகக் கேட்டேன். ஐயா அவர்கள் வாய்திறந்து மறுமொழி கூறமுன்னர், வீட்டுக்குள் இருந்து கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீமதி மதியாபரணம் அம்மா அவர்கள் சிறந்த டயறியையும், கலண்டரையும் பிற பொருட்களையும் கொண்டுவந்து என்னிடம் தந்தார்கள். ஐயா அவர்கள் புன்சிரிப்புடன், " என்ன ! நீர் வேறு யாருக்கோ வைத்திருந்த சாமான்களைக் கேட்டுக் கேள்வியில்லாமல் இவர் வந்தவுடன் கொடுத்துவிட்டீர் " என்று சொல்லிச் சிரிக்கத் தொடங்கினார். இவ்வாண்டின் ஆரம்பத்தில் அன்புரிமையுடன் கேட்பதற்கு ஐயா அவர்கள் இல்லையே என்பதை நினைந்து கலங்கியதுமுண்டு. எனக்கு எவ்வித இடையூறு ஏற்பட்டாலும் முதலிலே ஐயா அவர்களிடமே ஓடிப்போவேன். அவர்கள் தமக்கு எவ்வளவுவேலையிருந்தாலும், என்னைக் கண்டவுடன் ஆறுதலாக வெளி விருந்தையிலுள்ள நாற்காலியிலிருந்து உரையாடி ஏதாவது ஒரு வழிவகை சொல்லி என் மனதைச் சாந்தப்படுத்தி யனுப்பிவைத்த பின்னரே தமது வேலையைத் தொடர்ந்து செய்வார். ஐயா அவர்களுக்குப் பிறருடைய தொல்லைகளைக் கவனிப்பதில் ஒரு நாளில் பெரும் பொழுது கழிந்துவிடும். சிலசமயங்களில் இரவு 12 மணிவரை தூங்காமல் இருந்து, பொதுமக்கள் பிணக்குகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார். பிணக்குள்ள இரு பகுதியினரும் ஐயா அவர்களிடமே ஓடி வருவார்கள். இவ்வளவு கஷ்டங்களுடன் சமயத் தொண்டிலும் ஈடுபட்டுழைக்க ஐயா அவர்களுக்கு எவ்வாறு நேரங்கிடைக்கிறதெனப் பலமுறை நான் ஆச்சரியத்துடன் அவர்களையே கேட்பதுண்டு. இவற்றிற்கு மேலாக இனத்தவர்கள், நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று முக்கிய வைபவங்களில் கலந்து கொள்வதிலும் தவறமாட்டார்கள்.

1958 ம் ஆண்டில் இனக் கலவரம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் நாங்கள் அலெக்சான்ட்ரு ரெறேஸ் வீட்டிலிருந்து கிளம்பி, இராமகிருஷ்ண

ரெறேஸில் ஒரு சிறு குடிசை வாங்கி குடிபுகுந்தோம். இனக்கலவரம் ஓய்ந்து வெகு நாட்களுக்குப்பின்னர் ஒரு நாள் இரவு ஐயா அவர்களும் அவருடைய மனைவியாரும் சைவமங்கையர் வித்தியாலயத்தில் ஆசிரியையாக விருக்கும் அவருடைய அருமைப் புதல்வி பாலாம்பிகையும் எங்கள் வீட்டுக்கு வந்து, நெடுநேரம் பல விஷயங்களையும் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். "நீங்கள் இவ்வளவு நாட்க ளாக எங்களை மறந்து விட்டீர்கள் போலும்" என்று என் மனைவி அன்புரிமை காரணமாகக் கேட்ட போது, ஐயா அவர்கள் சிரித்துக்கொண்டு "அதற் காகத்தானே இவ்வளவு நெடுநேரம் உங்கள் வீட் டில தங்கியிருந்து உரையாடினேன், இனி எங்கள் மீது கோபமில்லைத்தானே" என்று சொல்லி எங் களைச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியூட்டிச் சென்றார்கள். ஒருமுறை எனக்கு என் இனத்தவர் ஒருவரைப் பிணையெடுக்க 5,000/– ரூபா தேவைப்பட்டது. என் வீட்டில் அரைக்காசுகூட இல்லை. என்னை நம்பி யார் இவ்வளவு பெருந் . தொகையைத் தரப் போகிறார்கள் என்ற கவலையுடன் ஐயா அவர்களிடம் ஆலோசனை கேட்கப் போயிருந்தேன். சிறிது நேரத் துக்குள் என் அவல நிலையை யுணர்ந்து, உடனே தன் மனைவியை அழைத்து, "இவருக்கு கொஞ்சம் காசு தேவையாம் 5,000/– ரூபா. காசு ஏதும் இருக்குமோ" என்று கேட்டார். உடனே அந்த அம்மையார், இரண்டாம் பேச்சின்றி 5,000/– ரூபா தாள் தாளாகக் கட்டித் தந்தார்கள். "என்ன அப்பா! நான் காசு இருக்கிறதோ என்று கேட்க முன்னர் நீர் எவ்வித பொறுப்புமின்றி 5,000/– ரூபாவைக் கொடுத்து விட்டீர்" என்று கேலிசெய் தார். என்னைப்போல் எத்தனையோ பேர் மதியா பரணம் ஐயா அவர்களிடம் பணம் கடனாக வாங்கி வியாபாரம் செய்து பெரிய பணக்காரராக இருக் கிறார்கள். சிலர் முன்பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காமலே ஐயா அவர்களிடம் வந்து மறு படியும் சில ஆயிரம் ரூபா கடனாக எடுத்துச் சென்ற தையும் யான் நன்கறிவேன். இவரைத் தொட்டுப் பிழைத்தவர்கள் பலருளர்.

ஐயா அவாகள் கதிர்காமத் தொண்டர் சபை, கொழும்பு விவேகானந்தசபை, கொழும்பு தமிழ்ச் சங்கம், திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை முதலிய பிரதான சமய விருத்திச் சபைகளில் உயர் பதவி வகித்து இறக்கும்வரை தொண்டாற்றி வந்தார்கள். ஆனால் சமயத் தொண்டு விஷயத்தில் ஐயா அவர்களுடைய கொள்கைக்கும் எனது கொள்கைக்கும் பெரிய முரண்பாடு உண்டு. இதனால் எங்களிடையே இருந்த அன்புக்கோ நட்புக்கோ எவ்வித பங்கமும் ஏற்படவில்லை. ஐயா அவர்களுடைய கொள்கை இன்னதென்பதை யான் நன்கறிவேன. அவ்வாறே எனது கொள்கையை ஐயா அவர் கள் நன்கறிவார்கள். காலஞ்சென்ற வீரபுருஷனும் அஞ்சாநெஞ்சம் படைத்த அருமசைவசித்தாந்தப் பேரறிஞருமாகிய உயர் திரு. சு. பெரியதம்பி அவர்களிடம் சைவ சமயத்தை ஆங்கிலததிலும் தமிழிலும் கற்ற மாணவர்களுள் வயதில்மிக இளையவனாக யான் இருந்தபடியால், அவருடைய குணகுணங்கள் என் உள்ளத்திற் படிந்திருந் தன. பொதுவாக உலகத்திலே வெற்றிகரமாக வாழ்க்கை நடத்திப் பேர் பெறவில்லை பெரிய தம்பி ஐயா அவர்கள். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் சமயச் சபைகளில் எவர் பிழை செய்தாலும் அதை மூடிமறைக்காது உடனுக்குடன் சுடச்சுடக் கண்டிப்பது அவர் வழக்கம். இதனால் போலிச்சமயத் தொண்டர்களுக்கும் சமயத் தொண்டு என்ற போர்வையில் பதவி வேட்கை கொண்டு அவற்றை இறுகக் கட்டிப் பிடித்துக் கொள்பவர் களுக்கும் அவர் ஒரு சண்டமாருதமாக விளங்கினார் கள். சமயச் சபைகளில் சுயநலப் புலி துள்ளி விளை யாடினால் அதனை உடனே சுட்டுக் கொல்லவேண்டு மென்பது பெரியதம்பி ஐயா அவர்களின் சித் தாந்தம். ஆனால் மதியாபரணம் ஐயா அவர்களின் கொள்கை என்னவென்றால் சுயநலக் கரடி வெம்புலி களையும் கட்டி சட்செவியையும் எடுத்தாட்டவேண்டு மானால் அவற்றுடனே வாழ்ந்து மெல்ல மெல்ல அடக்கி விடலாம் என்பதே. இதற்கு மலை போன்ற அசையா நிலையும் பூமிபோன்ற பொறுமையும் வேண்டும். இவ்விரு இயல்புகளும் மதியாபரணம் ஐயா அவர்களிடம் தாராளமாகப் பொலிந்திருந்தன. தன்னுடன் முரண்பட்டுக் கூக்குர லிடும் சுயநலப் புலிகளையெல்லாம் தன் புன்சிரிப் பாலும் பொறுமையாலும் அவற்றுடன் கலந்து சிறிது சிறிதாகக் குத்திக்காட்டி அடக்கி இறுதியில் வெற்றி வீரனாகிவிடுவார் மதியாபரணம் ஐயா அவர் கள்.

மதியாபரணம் ஐயா அவர்கள் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையிலோ கொழும்புத் தமிழ்ச் சங் கத்திலோ கதிர்காமத் தொண்டர் சபையிலோ சுய நலச் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்தபோதிலும், சிவனொளிபாதமலை போலக் கலங்காது நின்று, ஈற் றில் வெற்றி பெற்று, பகைவரையும் பணியச்செய்து விடுவார். இதுவே மதியாபரணம் ஐயா அவர்களை மாந்தருள் சிறந்து மாணிக்கமாக மதிக்கச்செய்தது. ஐயா அவர்களிடம் ஒரு முறை வாங்கிய கடனைத் திருப்பிக் கொடாமல் மறுபடியும் கஷ்டப்பட்டு வந்து

கடன் கேட்டால் உடனே கொடுத்துவிடும் பெருங் குணம் மதியாபரணம் ஐயா அவர்களின் ஆபரண மாகத் திகழ்ந்தது.

1947 ஆம் ஆண்டில் யான் எழுதிய "கதிர்காமம்" எனும் நூலின் அரங்கேற்றுவிழா 30.7.47 ல் வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில், **சைவ சித்தாந்த சரபம் திருப்பெருந் திரு. ஈசான சிவாசாரியசுவாமிகள்** தலைமையில் சிறப்பாக நிறைவெய்தி வேல் விழா நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த மண்டபத்தில், எனது நூலின் முதற் பிரதியை ஐயா அவர்கள் வாங்கவேண்டுமென யான் வேண்டிக் கொண்ட பொழுது அவர்கள் மறுப்புக்கூறுது மனமகிழ்ச்சியுடன் பெருந்தொகைப் பணம் கொடுத்து வாங்கி ஆசி கூறினர்கள். அப்பெரியாருடைய கைராசியால் என்னிடம் இருந்த நூல் பிரதிகள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் விலையாயின.

ஐயா அவர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பரிபாலனம் சீராக நடைபெற உதவி செய்து வந்தார்கள். ஆங்கிலக் கல்வி கற்று ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் படித்ததமிழர் அரசாங்க சேவையில் சேர்வதையே முதன்மை நோக்கமாகக் கொள்ள வேண்டியதில்லை, வர்த்தகத் துறையிலும் வெற்றியீட்டலாம் என வழிகாட்டியவர் திரு. மதியாபரணம் அவர்கள். இப்பெரியார் "தம்பிப்பிள்ளை பிரதர்ஸ்", எனப்படும் தாபனத்தில் பங்காளராக விளங்கியதுடன் ஆர்சிமியா பிள்ளை அன் சன்ஸ், ஸ்ரான்காட் பிரின்ரேர்ஸ், முருகன் படமாளிகை, சுதந்திரன் பத்திரிகைத் தாபனம், மெடிக்கல் அன் ஜெனரல் சப்ளையர்ஸ் தாபனம் முதலிய வியாபார நிறுவனங்களில் முக்கிய பங்காளராகவும் நிர்வாகியாகவும் விளங்கினர். வர்த்தகத்துறையில் வரும் இலாப நட்டங்களில் மனம்உடையாது தாம் ஆரம்பித்த தாபனங்களின் விருத்தியில் கண்ணும் கருத்துமாயிருந்தார்.

கொழும்பு விவேகானந்தசபை ரூபா 80,000/- பெறுமதியான கட்டிடத்துடன் கூடிய ஆதனத்தை அண்மையில் வாங்குவதற்கு முற்பணம் கொடுத்து ஊக்கமளித்தவர் திரு. மதியாபரணம் அவர்களே. ஐயா அவர்கள் தோள் கொடுத்து ஊக்கிவிடாதிருந்தால் விவேகானந்த சபை தன் ஆதனத்துக்கண்மையிலுள்ள ஆதனத்தைக் கை விட்டிருக்கவும் கூடும்.

கதிர்காமத் தொண்டர் சபை நெடுங்காலமாகச் சீரிய தொண்டாற்றுமாறு முன்னணியில் நின்று உழைத்து வந்தவர்கள் திரு. மதியாபரணம் அவர்கள். கப்பித்தாவத்தையிலுள்ள ஸ்ரீ பால விநாயகராலய ஆதன நிர்வாகத்தில் பல இடையூறுகள் ஏற்பட்ட பொழுது, அஞ்சா நெஞ்சத்துடன் உண்மை நிலையை எடுத்துக் காட்டி இக்கோயில் நிர்வாகம் செவ்வனே நடைபெற அரும்பாடுபட்டார்.

இரவு பகலாக வர்த்தகத்துறையிலும், சமயத் துறையிலும், பொதுத் தொண்டிலும் ஈடுபட்டு உழைத்துவந்த போதிலும், தம் இல்வாழ்க் கைக் கடமைகளை மறந்து விடவில்லை. சுற்ற மித்திரரின் மங்கல, அமங்கல வைபவங்களில் தவருது சமுகமளித்து, தேவையான உதவி புரிவார்.

ஐயா அவர்களின் இல்வாழ்க்கை சீராக நடப்பதற்கேற்ற உத்தமி மனைவியாக வாய்த்தது அவரின் பாக்கியம் என்றே நினைக்கிறேன். ஐயா அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை வருகிறவர்கள் போகிறவர்களுக்கெல்லாம் கடனுகவும் நன்கொடையாகவும் அள்ளி அள்ளிக் கொடுக்கப் பொறுமையுடன் ஒரு மனைவி முணுமுணுக்காமல் பார்த்துக்கொண்டு இருப்பாளானுல், அவ்வம்மையாரை உத்தம மனைவி என்று சொல்ல யார் தான் கூசுவார். ஐயா அவர்கள் வீட்டுக்குச் செல்வோர் இந்த அம்மையாரின் அருங்குணங்களையும் கணவனின் குறிப்பறிந்து நடக்கும் ஆற்றலையும், ஐயா அவர்கள் தம் மனைவியுடன் நகைச்சுவை ததும்ப உரையாடுவதையும் நன்கறிவர்.

ஐயா அவர்களின் அருங்குணமெல்லாம் எழுதுவதானுல் அது ஒரு பெரிய பாரதமாகிவிடும். இத்தகைய சிறந்த கணவனை இழந்து துன்புறும் **ஸ்ரீமதி நகுலாம்பிகை மதியாபரணம்** அவர்களுக்கும், **ஞானம்பிகை, கனகசபை, பாலாம்பிகை, பகீரதன், வரதலட்சுமி, சுபத்திராதேவி** ஆகிய பிள்ளைகளுக்கும், இராமருக்கு இலட்சுமணர் வாய்த்ததுபோல, மதியாபரணம் ஐயாவுக்கு வாய்த்த உடன் பிறந்தார் **திரு. க. செல்லப்பா** அவர்களுக்கும் சுற்றமித்திரருக்கும் எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேம். உயர்திரு. மதியாபரணம் ஐயா அவர்கள் ஆன்மாசாந்தி அடைவதாக. ஐயா அவர்கள் ஞாபகார்த்தமாக கதிர்காமத் தொண்டர் சபை வெளியிட்ட அழகிய தோத்திரப் பாமாலைப் பிரதியும், கொழும்பு விவேகானந்தசபை வெளியிட்ட சிறு கூட்டுப் பிரார்த்தனைப் புத்தகப் பிரதியும் கிடைக்கப் பெற்றேம்.

தமிழ்ப் பெருங்குடி மரபினர்

# மதியாபரணம் அவர்களின் தொண்டும்—மறைவும்

**திருக்கேதீச்சரம் திரு. வ. க. செல்லப்பா அவர்கள்**

இப் பெருந்தகையார் பழம்பதியாகிய தெல்லிப்பளையைச் சார்ந்த வீமன்காமம் என்னுமூரில் பழங்குடி மரபில் குருநாத உடையார் வழித்தோன்றலாக—கனகசபை அவர்களுக்கு அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். பின் தனது முன்னோர்போல் தமிழ்—சைவத் தொண்டுகளில் ஈடுபட்டு உழைத்தார்.

இப்பெரியாரின் அயரா அன்பின் அரும்பணியைக் கேள்வியுற்ற அடியேன்—1948 ம் ஆண்டு கொழும்பில் இவரின் இல்லத்தில் சந்தித்தபொழுது அவர் இன்சொற்கூறி எம்மை வரவேற்றனர். அதன் பின் திருக்கேதீச்சரத்திருப்பணி பற்றிக் கூறிய பின் அத்தலத்தில் திருஞானசம்பந்தர் மடம் ஒன்று தேவைப்படுகிறது. அதற்குப் பணம் அவசியம் தேவை எனக் கூறினேன். அவர் அதற்கு உடனே ஆயிரம் ரூபா தந்தார். அதுவுமல்லாமல் அம்மடம் நிறைவேறிய பின்னர் ஒருவருட காலத்திற்கு அம்மடத்திற்கு வரும் துறவிகளுக்கும் ஏனையோர்க்கும் இலவச போசனம் கொடுக்க வேண்டுமெனவும் உதவிபுரிந்தார். அதன் பின் மடத்தில் பெருமை கொண்ட சிலரால் திருப்பணிச் சபைக்கு மடத்தை ஒப்படைத்தேன். அதன் பின் மடம் பராபரிப்பற்ற நிலையில் இருந்தது. இது விபரம் முன்னைநாள் தலைவர் சைவப் பெரியார் ஸ்ரீமான் எஸ். சிவபாதசுந்தரம்பிள்ளை ஐயா அவர்களுக்கும் தெரியும். பின் சபையார் மடத்தை வேறு சிலருக்கு ஒப்படைத்தனர். அதன் பின் இப்போது இருக்கிற தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் மடத்தை இடித்து வேறு வடிவில் கட்ட ஆரம்பித்தபொழுது மதியாபரணம் அவர்கள் எமக்கு கூறியதாவது இந்த மடம் இப்போ இடிக்க அவசியமில்லை. அப்படி இடித்தாலும் கவலைப்பட வேண்டாம். வேறுமடம் கட்டுவதற்குப் பத்தாயிரம் ரூபா தருகிறேன் எனச் சொல்லி ஆறுதல் அளித்தனர். இப்படியான பெருங்குணம் வாய்ந்த கொடை வள்ளலை—அன்பு மணியை—எக்காலத்தில் காண்பேன் என வருந்துகின்றேன். இத்தகைய பெரியார் காத்திராப் பிரகாரம் நேர்ந்த வருத்தத்தினால் 15.12.60 வியாழக்கிழமை பிற்பகல் 5½ மணியளவில் துவாதசித்திதியில் மனைவி, மக்கள் சுற்றத்தார் வருந்த இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவரது ஆன்மா திருக்கேதீச்சரநாதர் திருவடிகளில் சேரும் வண்ணம் எம் பெருமானை வாழ்த்துகின்றேன்.



திரு. க. மதியாபரணம் அவர்களின் உருவப் படத்தை விவேகாநந்த சபை மண்டபத்தில் சேர் அருணாசலம் மகாதேவா அவர்கள் திறந்து வைக்கிறார். உபயம்: வீரகேசரி

**பெல்கிரேட் மகாநாட்டில் . . .** (24 ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை, எதிர் பார்க்க எங்களுக்கு உரிமையும் இல்லை. எனினும், சமாதானத்தை நிலை நாட்ட மண்டல சார்பற்ற நாடுகளும் உழைக்க முடியும் என்ற திட நம்பிக்கையிலேயே நாங்கள் பெல்கிரேட்டில் கூடியுள்ளோம். அரசாங்கங்கள் எவ்வளவு சக்தி மிக்கவையாக இருந்த போதிலும், பேச்சு வார்த்தைகளுக்கு மாற்று வழி யுத்தம் எனக் கருதாது இருக்கக் கூடியவகையில் உலக அபிப்பிராயத்தைத் தோற்றுவித்து வளர்த்தலே மண்டலசார்பற்ற நாடுகள் இத்தருணத்தில் செய்யக்கூடிய பணியாகும். உலகமே பணயமாக இருக்கும்போது, கண்ணியத்தைப்பற்றியோ கௌரவத்தைப்பற்றியோ கவலைப்படுவதற்கு இடமில்லை. மக்கள் உயிர்கள்சம்பந்தப்பட்டவற்றில் மற்றவை யாவும் இரண்டாம் தரமானவை. இதனை நாம் ஐயந்திரிபறத் தெளிவுபடுத்துவோம்.

நூல்நலனுய்வு

# விஷ்ணு சர்மாவின் இதோபதேசம்

தமிழில் நவாலியூர் சோ. நடராசன்

சரஸ்வதி வெளியீடு

விற்பனை உரிமை : தமிழ்ப் புத்தகாலயம், 393, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை 14.

விலை ரூபா 3.00.

"தமிழிலே எல்லாம் உண்டு, தனித்தமிழிலே எழுதுங்கள்" என்ற தனித் தமிழ் இயக்கக் கூக்குரல் கேட்கும் இக்காலத்திலும், வடமொழிக் காவியங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்து இன்புற்றுத் திளைத்து, அவற்றுடன் இரண்டறக் கலந்து இவற்றைநம் தமிழன்னைக்கும் சூட்டி அலங்கரித்தற்காக பாடுபடுபவர்தான் இலங்கையின் மணிபல்லவம் எனும் ஓர் இல்லத்தில் வாழும் **நவாலியூர் சோ. நடராசன்** அவர்கள். நாவலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் இரண்டாவது மகன். திரு நடராசன் என்பதைத் தாய் நாடும் சேய் நாடும் நன்கறியும். தாயுமானவர் பாடலையொத்த பாடல்களை இலகுவாக இயற்றும் ஆற்றல் படைத்தவர் என்பதற்கு இவர் இயற்றி வெளியிட்ட "**கீதாஞ்சலி**" சான்று பகரும். ஆங்கிலத்திலிருந்து அநேக சரித்திர நூல்களைத் தமிழாக்கஞ் செய்தவர் திரு. நடராசன் அவர்களே என்பதைப் பள்ளி சிறுரும் நன்கறிவர். திரு. நடராசன் இப்பொழுது வட மொழியிலுள்ள கீதோப தேசத்தைத் தமிழில் தந்துள்ளார். "பாம்பறியும் பாம்பின் கால்" என்ற முதுமொழிக்கிணங்க, ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்குப் பெயர்த்து எழுதும் கஷ்டங்களை மொழிபெயர்ப்பாளர் நன்குணர்வர். தமிழ் மரபு பிறழாது தமிழாக்கம் செய்வது இதனினும் கடினமான வேலை. ஆனுல் திரு. நடராசான் அவர்கள் விஷ்ணு சர்மா வடமொழியில் எழுதிய இதோபதேசத்தைத் தமிழில் தந்திருக்கும் முறை பாராட்டத் தக்கது. தமிழிலேயே எழுதப்பட்ட நூல்போல் அழகிய நடையுடன் மிளிர்கின்றது இந்நூல் என்பதனை இந்நூலைப் படிப்போர் நன்குணர்வர். இந்நூலுக்குத் தோற்றுவாயாக திரு. நடராசன் எழுதியுள்ள "இந்தியக் கதை மரபு" எனும் ஆராய்ச்சிக் கட்டுரை இவரது ஆங்கில, தமிழ், வடமொழி எனும் மும்மொழி அறிவுக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

"குகைகளில் வாழ்ந்து கொண்டு காட்டில் வேட்டையாடச் சென்ற மனிதன் திரும்பியதும், தனது அன்றைய அனுபவங்களை மற்றவருக்குச் சொல்லியிருப்பான். இதுவே கதைக்கு ஆரம்பமாயிருக்க வேண்டும்" என்று கதையின் வரலாறும் அது விருத்தியடைந்த முறையும், பல மொழிகளிற் காணப்படும் கதைகளின் ஒற்றுமை வேற்றுமைகளும் இக்கட்டுரையில் நன்கு அலசி ஆராயப்பட்டுள்ளன. 23 பக்கம் கொண்ட இக்கட்டுரையே ஒரு தனி நூலாக வெளிவருவதற்குரிய பெற்றிவாய்ந்துளது.

இக்காலத்திலே நூல் எழுதுவோரும் வெளியிடுவோரும் தமக்குமுன்னர் இத்தகைய நூல்களை எழுதினேரையாதல் வெளியிட்டோரையாதல் நன்றியறிதலுடன் குறிப்பிடாமல் மறைத்துவிட்டு இத்தகைய நூல் வரிசையினைத் தாமே முதன் முதலாக அங்குரார்ப்பணம் செய்து வைத்ததாகப் பிறர் கருத வேண்டும் என்ற மனப்பான்மையுடன் காணப்படுகின்றனர். ஆனுல் திரு. நடராசன் அவர்கள் தமக்கு முன்னர் சுன்னுகம் நாகநாத பண்டிதரும் அவருடைய வழித்தோன்றல் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரும் இதோபதேசத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பதைக் குறிப்பிட்டு அவர்களுக்கு நன்றி கூறிப் பின்னர் தாம் இதனைத் தமிழிற் செய்ததற் குரிய காரணத்தையும் காட்டியிருப்பது, திரு. நடராசன் அவர்களின் சிறந்த பண்பைப் புலப்படுத்தி நிற்கின்றது.

"இந்நூலைப் பிரதானமாக நம் செந்தமிழ் நாட்டுச் சிறுவரின் பொழுது போக்கை நினைத்தே தமிழில் ஆக்கினேம். இயன்ற அளவில் இலேசான உரைநடையில் எழுதியுள்ளோம். சிறுவர் இந்தச் சோலையிற் புகுந்து மகிழ்ச்சி யோடு விளையாட்டயர்வாராக" என்று இதன் மூல ஆசிரியரான விட்டுனுசன்மா எத்தனையோ நூற்றுண்டுகட்குமுன் இட்ட கட்டளை இன்றும் கேட்கிறது. அதையே எதிரொலி செய்து நீண்ட இம்முகவுரையை முடிப்பாம் எனத் திரு. நடராசன் கூறியிருப்பதன் உண்மையை இந்நூலைப் படிப்போர் நன்குணர்வர். (குசன்)

மு. இ. சிவராமசந்திரன்

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ ச. | தபாற் செலவு ரூ ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை ..<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டம் .. | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

R. Sivaramasundaram
Sacred Heart College Karaveddy